பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 06 சனிக்கிழமை 23.09.2023 கதிர் 316

## இது ரகசியம் அல்ல!

தியாகிதிலீபனின்நினைவேந்தலைத் தடை செய்வதில் பொலிஸ் தரப்புத் தொடர்ந்துதீவிரமாகமுனைப்புக்காட்டி வருகின்றது. திருகோணமலையில் திலீபனின் நினைவூர்தி மீது சிங்களவர்கள் தாக்குதல் நடத்தியதையும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதையும் தடுத்து நிறுத்தாமல் பொலிஸார் அவ்வளவு மென்மையாக வன்முறைக் கும்பலுடன் நடந்து கொண்டதற்கான காரணத்தை இந்தப் பின்புலத்துடனேயே நோக்கவேண்டும்.

திலீபனின் நினைவு தினத்தை தடுப்பதற்கான சட்ட ரீதியான முன்முயற்சிகளில் பொலிஸார் குறைந்தபட்சம் வடக்கு கிழக்கில் தோல்வியடைவதன் ☞ 2

# இலங்கையை பொறுப்புக்கூற வைக்கவேண்டும் அமெரிக்கா

## அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜாங்கச் செயலருக்குக் கடிதம்

சர்வதேச மனித உரிமை உரிமைச் சட்டங்கள் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் என்பன இறுதிப் போரில் மீறப்பட்டமைக்கு இலங்கையை அமெரிக்க இராஜாங்க திணைக்களம் பொறுப்புக்கூறச்செய்யவேண்டுமென வலியுறுத்தி அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்களுக்கு அமெரிக்ககாங்கிரஸின்உறுப்பினர்கள் கடிதமொன்றைஅனுப்பிவைத்துள்ளனர்.

அமெரிக்க காங்கிரஸில் அங்கம் வகிக்கும் இரு கட்சிகளின் உறுப்பினர்களான, சம்மர் லீ பில்ஜோன்சன், டானிகே டேவிஸ், ஜேம்ஸ் பிமக்கவர்ன், ஜேமி ரஸ்கின், இல்ஹான் ஓமர் கொரி புஸ், டேபோரா கே ரொஸ் ஆகியோர் மேற்படி கடிதத்தில் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ளனர். ☞ 2

## ரணிலின் பொறுமைக்கு பாராட்டு

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்னர் எஞ்சிய பயங்கரவாதிகளைக் கைது செய்வதற்கும் மேலும் குண்டுகள் வெடிக்காமல் இருப்பதற்கும்அப்போதுபிரதமாகஇருந்த ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்தார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார். அத்தோடு அந்தக் காலப் பகுதியில் ரணில் விக்கிரமசிங்க காட்டிய ☞ 8

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்பே சஹ்ரனை கைது செய்ய உத்தரவிட்டேன்

### மைத்திரி நேற்றுத் தன்னிலை விளக்கம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னதாக 2019 ஜனவரி மாதம் நடத்தப்பட்ட பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் சஹ்ரானை கைது செய்யுமாறு தெளிவான பணிப்புரையைத் தான் விடுத்தார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பாக சபைஒத்திவைப்புவேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மூன்று சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதங்களின் போது என்னை இலக்கு வைத்து கடுமை ☞ 2

## மோதியது பட்டா வாகனம் ஏ-9 வீதியில் ஒருவர் இறப்பு

### வவுனியா, பறண்நட்டகல்லில் சம்பவம்



வவுனியா, ஏ-9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா மாவட்டம், பறண்நட்டகல் சந்தியில் இந்த விபத்து இடம்பெற்றது என்று ஓமந்தைப் ☞ 8

## கிளிநொச்சி படகு வேதாரணியத்தில் கரை ஒதுங்கியது



(ந.லோகதயாளன்.)

இலங்கை மீன்பிடிப் படகுஒன்றுஇந்தியாவின் வேதாரணியம் கடற்கரையில் ஒதுங்கிய நிலையில் தமிழ்நாடு பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பதிவு இலக்கம் கொண்டதான இந்தப் படகு நேற்று அதிகாலை கோடியக்கரையில் கவிழ்ந்த நிலையில் மிதப்பதாகவேதாரண்யம் கடலோர பாதுகாப்பு குழும போலீசாருக்குத் தகவல் கிடைத்தது. கோடியக்கரை, பம்ப் ஹவுஸ் பகுதிக்கு மேற்கே ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் ☞ 8

## நாடாளுமன்றக் குழுக்களிலிருந்து ரஹீம் எம்.பி. இடைநிறுத்தம்

நாடாளுமன்றஉறுப்பினர் அலி சப்ரி ரஹீம்; நாடாளுமன்றக் குழுக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதைத் தற்காலிகமாக நிறுத்துவது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு நேற்று நாடாளுமன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரிரஹீமால் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத ☞ 2

## ஐ.நா. செயலாளர் நாயகத்துடன் ஜனாதிபதி ரணில் சந்தித்து பேச்சு

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம்அன்டோனியோ குட்டரெஸ் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு இடையிலான உத்தியோக பூர்வசந்திப்புஐக்கியநாடுகள் சபையின் தலைமையத்தில்நடைபெற்றது.

இதன்போது, செயலாளர்நாயகம், பொருளாதார சவால்களை எதிர் கொள்ளும் வகையில் இலங்கை மக்களுடான ஒத்துழைப்பு தொடருமென வெளிப்படுத்தினார். ☞ 8

## தற்போதும் உள்ளார்கள் என்று கூறப்படும் ஐ.எஸ். அமைப்பினரை பிள்ளையான் இனங்காட்டவேண்டியது அவசியம்

### அதாவுல்லாஹ் எம்.பி. நாடாளுமன்றில் வலியுறுத்து

ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர்கள்தற்போதும் இருக்கின்றனர் என்று இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவிக்கும் விடயம் உண்மையாகஇருந்தால் அவர் அவ்வாறானவர்களை இனங்காட்ட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் ஏல்.எல்.எம். அதாவுல்லாஹ் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுநடைபெற்ற உயிர்த்த ஞாயிறு ☞ 8

## ஜே.வி.பி. எமக்கு ஆயுதங்கள் தந்தது

### நாடாளுமன்றில் பிள்ளையான் நேற்று திடீர் அறிவிப்பு உடனடியாக அதனை மறுத்தார் கட்சித் தலைவர் அனுர

தமிழீழ விடுதலைப் புலிகள்அமைப்பிலிருந்து தாம் பிரிந்து வந்தபோது ஜே.வி.பி. அமைப்பினர் தமக்கு ஆயுதங்கள் தந்தனர் என்று இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) நேற்று நாடாளுமன்றத்தில் திடீரென அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு ☞ 8

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரியான

# அபூஹிந் என்ற புனைபெயர் நபர் யார் எனக் கண்டறிவது அவசியம்

### நாடாளுமன்றில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி அபூஹிந். அவர்யாரெனக்கண்டறியப்படவேண்டும்வலியுறுத்தியஎதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச உண்மையானசூத்திரதாரிகளை கண்டுபிடிக்க தவறினால் எமது ஆட்சியில் உரிய நடவடிக்கை எடுப்போம் என்ற உறுதிமொழியை தாக்குதலில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு வழங்குகிறேன் என்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தேசியப் பாதுகாப்பு தொடர்பான சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையை முழுமையாக எங்கள் யாருக்கும் பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால் செப்டெம்பர் 11 அமெரிக்க பெண்டகன்தாக்குதல்தொடர்பான விசாரணை ☞ 8

## சொனிக் சொனிக் என்பவர் புலனாய்வுத்துறை அதிகாரி

### நாடாளுமன்றில் வெளிப்படுத்தினார் சரத் வீரசேகர

உயிர்த்த ஞாயிறு தாக்குதலாளிகளுடன் தொடர்புபட்டார் என்று கூறப்படும் சொனிக் சொனிக் என்கிற பெயருக்குரியவர் அரசபுலனாய்வு அதிகாரியே என்று நாடாளுமன்றத்தில்தெரிவித்தார் பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்ரியர்அட்மிரல்சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பாக சபை ஒத்திவைப்பு வேளைபிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயேமேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

காரணமாக, திருகோணமலையில் நினைவூர்தி இலக்கு வைக்கப்பட்டு வன்முறைகட்டவிழ்த்துவிடப்பட்டிருப்பதற்கு எல்லா வகையான பின்புலங்களையும் மறுக்க முடியாது. சாம, தான. தண்ட, பேதங்களைப் பொலிஸார் எந்த ஒழுங்கும் இல்லாமல் கையாள்வார்கள் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

யாழ்ப்பாணத்தில் இந்தத் தடவை திலீபனின் நினைவு நிகழ்வைத் தடுத்து நிறுத்த இரண்டு தடவைகள் பொலிஸார் முயற்சித்தனர். முதல் தடவை யாழ்ப்பாணப் பொலிஸார்தாமாகமுன்வந்து இந்த நடவடிக்கையை எடுத்தனர். அதில் தோல்வி கண்டனர். அதைத்தொடர்ந்து கொழும்பில்இருந்துபொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த சட்டஅறிவுள்ள, சட்டத்தரணிக் கற்கையை நிறைவு செய்த அதிகாரிகளும்சட்டமாஅதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளும்வருவிக்கப்பட்டு இரண்டாவதுதடவையாகவும் நீதிமன்றத்தின் மூலம் தடை பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கென அவசர அவசரமாக ஹெலி மூலம் கொழும்பிலிருந்து அதிகாரிகள் அழைத்து வரப்பட்டனர். இருந்தாலும் இந்தத் தடவையும் அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. ஆனால், இந்த நிலைமை எப்போதும் தொடரும் என்று சொல்லுவதற்கில்லை.

திலீபன் நினைவு நிகழ்வுகளைத் தடுப்பதற்கு பொலிஸார் நீதிமன்றங்கள் ஊடாகநடவடிக்கை எடுப்பது ஒருபுறமிருக்க, மற்றொரு வழியிலும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னகர்த்தி வருகின்றனர்.

கடந்த காலங்களில் தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுகளை நீதிமன்றங்களில் நியாயப்படுத்தும்போது தமிழ்த் தரப்பினர் ஒரு வாதத்தை முன்வைத்தனர். அதாவது, திலீபனின் நினைவுத் தூபியைச் சுற்றிய பகுதிகளை அறிக்கையிடுவதற்கும் சீரமைப்பதற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடுகளைச் செய்துள்ளனர், தியாகி திலீபன் ஆயுதப் படையின் உறுப்பினராகஇருந்தபோதும் அதற்கு எதிரான அகிம்சை வழியில் போராடியவர், அதனாலேயேநாடாளுமன்ற உறுப்பினர்களால் அவரது நினைவிடத்திற்கென ஆளும் தரப்பின்அங்கீகாரத்துடன்நிதி ஒதுக்க முடிந்துள்ளது. அப்படி இலங்கை அரசே திலீபனின் அகிம்சையைமதிக்கும்போது பொலிஸார் அவரது நினைவு நிகழ்வுகளைத்தடைசெய்வது ஏற்புடையதல்லஎன்றவாதம் முன்வைக்கப்பட்டது.

இதையடுத்து இந்த விவகாரம் தொடர்பில் பொலிஸார்தோண்டித்துருவி புலன் விசாரணைகளைத் தொடங்கியிருந்தனர். இந்தநிதி ஒதுக்கீடுகள் 2015 அமைந்த நல்லாட்சி எனப்படும் மைத்திரி - ரணில் ஆட்சியில் செய்யப்பட்டவை. அப்போது பிரதமராக இருந்தவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவர் பதவியில்நீடிப்பதற்கும், புதிய அரசமைப்பு முயற்சிகள் என்று மக்களைப் பேய்க்காட்டுவதற்கும் அவருக்கு அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுதேவையாகஇருந்தது. அதனால் கூட்டமைப்பு நாடாளுமன்றஉறுப்பினர்கள் திலீபன் நினைவிடத்திற்கு வழங்கிய ஒதுக்கீடுகள் அனுமதிக்கப்பட்டன.

ரணிலுக்குக் கீழிருந்த அமைச்சின் ஊடாக கொழும்பில் உயரதிகாரிகள் அனைவரும்அனுமதியளித்து மேற்கொள்ளப்பட்ட இந்த நிதி ஒதுக்கீட்டின் கீழ் செய்யப்பட்ட பணிகளுக்காக இப்போது நல்லூர் பிரதேச செயலரைப் பலிக்கடாவாக்கி திலீபனின் நினைவிடத்திற்கு நிதி ஒதுக்கியமையை தவறு என்று பறைசாற்ற பொலிஸ் புலனாய்வாளர்கள் கடுமையாக உழைத்து வருகின்றனர். 3 தடவைகள் நல்லூர் பிரதேச செயலரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்ட நடத்தப்பட்ட விசாரணைகள் இறுதிக் கட்டத்தைஅடைந்துள்ளதாகத் தெரிகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கியிருந்தாலும் அது இலங்கை அரசுக்கு எதிரான பயங்கரவாதி ஒருவரின் நினைவிடத்திற்கானது என்பதைத் தெரிந்துகொண்டு அந்த நிதியைஉடனடியாகத்திருப்பி அனுப்பியருக்கவேண்டியது நல்லூர் பிரதேச செயலரின் கடமை என்றும் எனவே இந்த விடயத்தில் அவரே குற்றவாளி என்றும் பிரதேச செயலரைப் பலிக்கடாவாக்க பொலிஸார் முயன்றுள்ளனர் என்றும் அறிய முடிந்தது. தமது விசாரணைகளின் அடிப்படையில் நல்லூர் பிரதேச செயலருக்கு எதிராகத் திணைக்கள ரீதியான நடவடிக்கைக்கும் சட்ட நடவடிக்கைக்கும் அவர்கள் பரிந்துரைகளை முன்வைத்திருக்கிறார்கள் என்றும் தெரியவந்தது.

அரசியல்வாதிகள், கொழும்பில் திட்டத்தை ஏற்று அனுமதித்து நிதி ஒதுக்கீட்டுக்கு வழிவகுத்த உயர் அதிகாரிகளை எல்லாம் விட்டுவிட்டு, இப்போது இங்குள்ள தமிழ் அதிகாரி ஒருவரைப் பலிக்கடாவாக்க தீவிரமாக முயற்சிகள் முன்னகர்கின்றன. இந்த விடயத்தில் பிரதேச செயலரைக் குற்றவாளியாக்கி அவரிடமிருந்துஅந்தப்பணத்தைமீள வசூலித்துவிட்டால், திலீபனின் நினைவுதினத்திற்கு அரசின் அங்கீகாரம் இருக்கின்றது என்கிற வகையில் தமிழர் தரப்பில் முன்வைக்கப்படும் வாதத்தை முறியடித்துவிட முடியும் என்று பொலிஸார் கருதுகின்றனர்.

இதனால் அடுத்தடுத்த வருடங்களில் திலீபனின் நினைவுதினத்தை தடுப்பதில் அவர்கள் இன்னும் தீவிரமாக முயற்சிகளை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இலங்கையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் சித்திரவதை உட்பட சர்வதேச போர்க் குற்றங்கள் என கருதப்படக்கூடிய குற்றங்கள் உட்பட சர்வதேச சட்டம சர்வதேச மனித உரிமைகள் சட்டம் ஆகியவை மீறப்பட்டமை தொடர்பில் போதிய நீதியும் பொறுப்புக்கூறலும் இல்லாத நிலையில் இந்தக் கடிதம் எழுதப்படுகின்றது.

இலங்கையில் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். இதுஅந்தநாடுஎதிர்கொள்ளும் அரசியல்சமூகநெருக்கடிக்கு காரணமாகின்றது. இது மனிதஉரிமைகளை, ஜனநாயகக்கொள்கைகளைப்பின்பற்றும் அமெரிக்காவின் கொள்கைகளிற்கு முரணானது. இதனை நிறுத்தவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான ஆயுதமோதல்களின் போது இலங்கை அரசும் அதன் படையினரும் சர்வதேசக் குற்றங்களை இழைத்தனர் என்பதற்கான நம்பகதன்ஷ்மிக்க குற்றச்சாட்டுகள் உள்ளன.

2009 ஜனவரி முதல் மே மாதம் வரையிலான நடவடிக்கைகள் குறிப்பாக கரிசனைக்குரியவையாக உள்ளன இக்காலப்பகுதியில் இலங்கை இராணுவத்தினர் வேண்டுமென்றே பொதுமக்கள் மீதும் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மருத்துவமனைகள் போன்ற பொதுமக்கள்இலக்குகள்மீதும் தாக்குதலைமேற்கொண்டனர். மேலும் அவர்கள் தமிழ்ப் பெண்களை பாலியல் வன்முறைக்குள்ளாக்கி சித்திரவதை செய்து சிதைத்துக் கொலை செய்தனர்.

வெள்ளைகொடியுடன் சரணடைந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களைசுட்டுக்கொன்றனர்- விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களையும்பொதுமக்களையும் பலவந்தமாக காணாமல்போகச்செய்தனர்- அவர்களிற்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் உள்ளது.

குறிப்பிட்டஐந்துமாதங்களில் என்ன நடந்தது என்பது தெரியாத அல்லது கொல்லப்பட்டனர்எனகருதப்படும்பொது மக்களின் எண்ணிக்கை 40,000 முதல் 169,796 ஆகும்.

குற்றச்சாட்டுகளைச் சுயாதீனமாக விசாரணை செய்து வழக்குத் தொடுப்பதற்குப் பதில் இலங்கை ஆட்சியாளர்கள் பல போர்க் குற்றவாளிகளிற்கு அரசியல் இராணுவ தலைமையகப் பதவிகளை வழங்கியுள்ளது.

சிலர் அந்தப் பதவிகளில் தொடர்ந்தும் நீடிக்கின்றனர் - இலங்கை ஆட்சியாளர்கள் தொடர்ந்தும்தமிழ்மக்களிற்கு எதிராகச்சித்திரவதைபாலியல் வன்முறை பலவந்தமாக காணாமல் போகச்செய்தல் போன்ற சித்திரவதைகளில் ஈடுபடுகின்றது.

வடக்கு,கிழக்கில் தொடர்ச்சியானஇராணுவமயமாக்கல் இடம்பெறுகின்றது இலங்கை அரசு காணி அபகரிப்புகளை தீவிரப்படுத்தியுள்ளது நினைவுகூருவதற்கான உரிமையை ஒடுக்கிவருகின்றது.

இலங்கையின் நீண்டகால சித்திரவதை மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்ற வரலாற்றை கருத்தில் கொள்ளும்போது முழுமையாக தண்டனையின் பிடியிலிருந்து விலக்களித்தலுடன் இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களிற்கு எதிராகப் பயங்கரமான குற்றங்களை இழைப்பது துரதிஸ்டவசமாக ஆச்சரியமளிக்கவில்லை - என்றுள்ளது.

## நாடாளுமன்றக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை குறித்து நாடாளுமன்றத்தின் ஒழுக்கவியல் மற்றும்சிறப்புரிமைகள்பற்றிய குழுவின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருப்பதால், ரஹீம் நாடாளுமன்றத்தின் குழுக்களைப்பிரதிநிதித்துவம் செய்து செய்வது சிக்லானது. எனவே விசாரணை முடியும் வரை அலி சப்ரி ரஹீம் நாடாளுமன்ற குழுக்களைப் பிரதிநிதித்துவம்செய்தலாகாது என்று கோரும் தீர்மான வரைபை எதிர்க் கட்சித் தலைவர் முன்வைத்தார்.

எதிர்க்கட்சியின் முதற் கோலாசான் லக்ஷ்மன் கிரியல்ல அந்த வரைபை வழிமொழிந்தார். அதைத் தொடர்ந்து இதற்குப் நாடாளுமன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டது.

74 மில்லியன் ரூபா பெறுமதியான 3.3கிலோகிராம் தங்கம்மற்றும் 4.2மில்லியன் ரூபா பெறுமதியான 41 கையடக்கத்தொலை பேசிகளை சட்டவிரோதமாக நாட்டுக்குள் எடுத்துவந்த சமயம் சுங்கத்துறை அதிகாரிகளால் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கைதுசெய்யப்பட்டார். பின்னர் அவரிடம் 7.5 மில்லியன்ரூபா மாத்திரம் தண்டப்பணம் அறவிடப்பட்டது. எனினும், 80 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கத்தை எடுத்துவந்தபிரான்ஸ்நாட்டுப் பிரஜை ஒருவரிடமிருந்து 70 மில்லியன் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. எந்தக்காரணத்தின் அடிப்படையில்நாடாளுமன்ற உறுப்பினருக்கு குறைந்த தண்டப்பணம் அறவிடப்பட்டது என்பது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் எதிர்க் கட்சித்தலைவர்தெரிவித்தார்.

# 25 ஆயிரம் குடும்பங்களுக்கு வடக்கில் புதிய வீட்டு திட்டம்

## ஆளுநர் திருமதி சாள்ஸ் அறிவிப்பு



வடக்கு மாகாணத்தில் குறைந்த வருமானம் பெறும் 25ஆயிரம்குடும்பங்களுக்கு உள்ளக வசதிகளுடன் கூடிய வீடுகள் அரசால் அமைத்துக்கொடுக் கப்படவுள்ளன. இதற்கான சிறந்த திட்டத்தை பயனுள்ள வகையில் உருவாக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

வடக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் வீட்டுத் திட்டங்கள் குறித்து ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.



யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் குறைந்தவருமானம்கொண்ட நிரந்தர வீடற்ற குடும்பங்களை இனங்கண்டு புதிய வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஆளுநர் பணித்தார்.

புதிய வீடமைப்புத் திட்டத்தில் உட்கட்டமைப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறும் தெரிவித்த அவர், கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டது போன்று தோல்வியடைந்த வீட்டுத் திட்டங்களாக இல்லாமல் புதியவீட்டுத்திட்டத்தைச்சிறப்பாக மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்தப் புதிய வீட்டுத் திட்டத்தில் வீடமைக்க 5 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. வீட்டின் உள்ளக வசதிகளும் செய்துகொடுக்கப்படவுள்ளது. இவ்வீடுகளின் கூரைகளில் சூரிய மின் உற்பத்திக் கலங்களைப் பொருத்துவது குறித்தும் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும்என்று வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வடமாகாணத்தில் அமுல் படுத்தப்பட்ட சில வீட்டுத் திட்டங்கள் முழுமையாகச் செயற்படுத்தப்படாமையைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், 6000 நிரந்தர வீடுகள் முழுமையடையாமல் பயனாளிகளுக்கு வழங்க முடியாத நிலையில் காணப்படுகின்றன, இவ்வாறு தோல்வியடைந்த வீட்டுத் திட்டங்களைப் போலல்லாது இந்த 25,000 வீடுகளும் முழுமையாக்கப்பட வேண்டும். அதற்கு அதிகாரிகள் மிகவும் திட்டமிட்டு சரியான முறையில் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மாவட்டச்செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், தேசியவீடமைப்புஅபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் ஆகியோர் இத்திட்டத்திற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கடந்தகாலங்களில்மேற்கொள்ளப்பட்ட சில வீட்டுத் திட்டங்கள் தோல்வியடைந்தமைக்கான காரணங்களைவீடமைப்புஅபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர்கள் ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். அவற்றைக் கேட்டறிந்த ஆளுநர் புதிய வீடமைப்புத் திட்டமானது ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் வகையில் தயாரிக்கப்படும் என்று கூறினார்.

மேலும், கடந்த காலங்களில் பகுதியளவு கட்டப்பட்டு கைவிடப்பட்ட வீடுகளின் பணிகளை இத்திட்டத்தின் கீழ் முடிக்க முடியுமா என்பது பற்றி உடனடியாக ஆய்வு செய்யவேண்டும் என்றும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

## உயிர்த்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டன. நான் அவற்றுக்கு உரிய பதில்களை அளித்தேன். ஆனால் அவற்றையாரும்பொருட்டாகக் கொள்ளவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் உண்மைகளை தெளிவுபடுத்துவதற்கு மீண்டும் விரும்புகின்றேன். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்நடத்தப்பட்டதினத்திற்கு மறுதினம், என்னால் நியமிக்கப்பட்ட அமைச்சரவையின் பேச்சாளர், ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்து சுழல்கதிரையில் சுற்றியவாறு, நான் தாக்குதல் சம்பவத்தை அறிந்து வைத்துக்கொண்டுதான் சிங்கப்பூருக்குச் சென்றேன் என்று தெரிவித்தார். நானே இந்தச் சம்பவத்திற்கு பொறுப்புக்கூற வேண்டுமென்றும் - தெரிவித்தார்.

என்னிடத்தில் தாக்குதல் சம்பவத்தைதடுக்காமைக்காக நூறு மில்லியன் இழப்பீடு கோரிதொடுக்கப்பட்ட வழக்கு விசாரணையின்பின்னர்ஏழு நீதிபதிகள் அடங்கிய அமர்வு வழங்கிய தீர்ப்பில் முன்னாள் ஜனாதிபதிக்குப் பாதுகாப்ப தரப்பினர் எவ்விதமான தகவல்களையும் முன்கூட்டியே வழங்கவில்லை என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், சிலர் சஹ்ரான் மீது நடவடிக்கை எடுப்பதற்குதேசியபாதுகாப்புச் சபையை கூட்டி நான் உத்தரவிடவில்லை என்றும் குற்றம்சாட்டுகின்றனர். நான் ஜனவரி மாதமே சஹ்ரான் மீது நடவடிக்கையை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளேன்.

அதுமட்டுமன்;றி 2017 பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவரை கைது செய்வதற்கு ஜனாதிபதிசெல்லவேண்டுமா? அவரைக் கைது செய்வதற்கு அதிகாரிகள் பலர் உள்ளனர். அதுமட்டுமன்றி 2019 ஜனவரி சஹ்ரானை ஏன் கைது செய்யவில்லை என்றும் கேள்விகளைத் தொடுத்திருக்கின்றேன்.

தாக்குதல் குறித்து விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவினர், அறிக்கையை ஜனாதிபதி கோட்டாபயவுக்கு வழங்கியபோது, அறிக்கைக்கு மேலதிகமாகஒருகோப்பினைத் தனியாக வழங்கினார்கள். அந்தக் கோப்பினை சட்டமா அதிபருக்கோ அல்லதுவேறுயாருக்கோவழங்க வேண்டாம், அதனை நீங்கள் தனியாக வைத்துக் கொள்ளுங்கள் என்றும் கூறினார்கள். ஆகவே அதில் உள்ள விடயங்கள் என்ன என்பதுகுறித்துஎம்எவருக்கும் தெரியாதுள்ளது.

அதேநேரம் எனக்கு கிடைக்கின்ற தகவல்களின் பிரகாரம், அறிக்கையைளிக்கப்பட்டபோது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்பந்தமாக ஏதேனும்விடயங்கள் உள்ளனவா என்று அருகில் இருந்த ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர கேள்வி எழுப்பியுள்ளார். அப்போது ஆணைக்குழுவின் உறுப்பினர் அவர் குறித்த விடயம் பரிந்துரையில் உள்ளது. நீங்கள் விரும்பினால் குற்றவியல் வழக்கினை தொடுக்கலாம். அல்லதுதவிர்க்கலாம் என்று பதிலளித்துள்ளார். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் இந்த

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# இரத்தக்கறை இல்லையென்றால் ராஜபக்ஷக்கள் விசாரணைகளுக்கு முகம் கொடுக்கலாம்தானே?

## எஸ்.எம்.மரிக்கார் கேள்விக்கணை



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்கர்கள், முஸ்லிம் சமூகத்தினர் நியாயத்தை கோருகிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷர்களின் பாதுகாவலனாக செயற்படப் போகிறார்களா? அல்லது பாதிக் கப்பட்ட தரப்பினருக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்கப் போகிறாரா? என்பதை எதிர்பார்த்துள்ளோம். சர்வதேச விசாரணை ஊடாகவே நியாயத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

2019.04.21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இதுவரை நீதி கிடைக் கவில்லை. குண்டுத்தாக்குதல் தொடர்பில் தகவல் கிடைத்திருந்தும் மிலேச்சத்தனமான தாக்குதலைத் தடுத்த பாதுகாப்பு தரப்பினர் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என் பது பிரச்சினைக்குரியது.

குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட சிறந்த அதிகாரிகளை கோட்டபய ராஜபக்ஷ பதவி யேற்றவுடன் இடம் மாற்றம் செய்தார்.

ஒருசிலரை பதவி நீக்கி நெருக்கடிக்குள்ளாக்கினார். இரத்தக் கறை இல்லாமல் இருந்திருந்தால் தைரியமாக விசாரணைகளுக்கு முகம் கொடுத்திருக்கலாம்.

குண்டுத்தாக்குதல் சம்பவத்தால் நல்லாட்சி அரசாங்கம் பாரிய நெருக்கடிகளை எதிர்க்கொண்டது. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது. ஏப்ரல் 25 ஆம் திகதி 'நான் தான் ஜனாதிபதி வேட்பாளர்' என கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்தார். கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தவுடன் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டன.

குண்டுத்தாக்குதல் சம்பவத்தால் ஐக்கிய தேசியக் கட்சியை நாட்டு மக்கள் முழுமையாகப் புறக் கணித்தார்கள். ரணில் விக்கிரமசிங்க ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். பொருளாதாரப் பாதிப்புக்கு பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக் குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்கர்கள், முஸ்லிம் சமூகத் தினர் நியாயத்தை கோருகிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷர்களின் பாது காவலனாக செயற்படப் போகிறார்களா? அல்லது பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயத்தை பெற் றுக்கொடுக்கப் போகி றாரா? என்பதை எதிர்பார்த்துள்ளோம்.

குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற போது அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி சுரேஷ் சலே நாட்டில் இல்லை என ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். யுத்தக் காலத்தில் விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் கொழும்புக்கு வருகை தந்து தாக்குதல்களை நடத்தவில்லை. வடக்கில் இருந்த நிலையில் தான் தாக்குதலை நடத்தினார்.

நௌபர் மௌலவி குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி எனக் குறிப்பிடப்படுவது உண்மையல்ல. அன்ரன் பாலசிங்கத்தை போலவே நௌபர் மௌலவி செயற் பட்டார். அன்டன் பாலசிங்கம், பிரபாகரன் அல்லர், ஆகவே நௌபர் மௌலவி பிரதான சூத்திரதாரியல் லர் என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும். குண்டுத்தாக்குதல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விசாரணை அறிக்கைகளில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன. உண்மை தொடர்ந்து மூடி மறைக்கப்படுகிறது. ஆகவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க சர்வதேச விசாரணையே இறுதித் தீர்வாக அமையும். - என்றார்.

(05)

# திரிபோஷா வழங்க அமெரிக்கா உதவி

அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் அமைப்பு, இலங்கையில் திரிபோஷாவலுவூட்டப்பட்ட உணவுத் திட்டத்தைத் முன்னெடுக்கும் முகமாக 4 ஆயிரத்து 700 மெற் றிக் தொன் சோயா பீன்ஸ் மற்றும் கணிசமான அளவு மக் காச்சோளத்தை இலங்கை திரிபோஷா லிமிடெட் நிறுவனத் திடம் கையளிக்கும் நிகழ்ச்ச ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தின் ஏற்பாட்டில் திரிபோஷா தொழிற்சாலையில் இடம்பெற்றது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கில் டபிள்யு.எவ்.பியால் முன்னெடுக்கும் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக, 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை யு.எஸ்.எயிட் அமைப்பு வழங்குகின்றது.

இலங்கை மற்றும் உலகலாவிய ரீதியில் பாரிய உதவிகளை முன்னெடுத்துவரும் ஐக்கிய அமெரிக்காவானது டபிள்யு.எவ்.பியினூடாக இலங்கையில் உணவு பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பொருளாதார, உணவு மற்றும் பெறுமதிசேர்வவுச் சர்களையும் வழங்கிவருகின்ற அதேவேளை தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து நிகழ்ச்சி திட்டம், பாடசாலை உணவு திட்டம் மற்றும் திரிபோவலுவூட்டப்பட்ட உணவு திட்டத்திற்கும் உதவிவருகின்றது.

'இலங்கைச் சிறார்களின் போசனைக் குறைப்பாட்டைத் தடுப்பதற்குத் தேவையான திரிபோஷாவை தயாரிப்பதற்குத் தேவையான அத்தியாவசிய மூலப்பொருள்களான வலுவூட்டப்பட்ட உணவு பதார்த்தங்களாக நாங்கள் வழங்குவதன் மூலம் இலங்கையுடன் நாம் பேணிவரும் நீண்ட கால உறவை வலுப்படுத்திக்கொள்கின்றோம்' என யு.எஸ்.எயிட் அமைப்பின், நிர்வாக மற்றும் இலகுவில் பாதிப்புக்குள்ளாகும் மக்கள் தொகைக்கான அலுவலகத்தின் இயக்குநர் எஸ்டா சின்போ கூறினார்.

கடந்த வருடம் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவிற்கு முகம்கொடுக்கும் வகையில் சோயா பீன்ஸ் மற்றும் கணிசமான அளவு மக்காச்சோளத்தை எமது பங்காளிகளான உலக உணவு திட்டம் மற்றும் சுகாதார அமைச்சகம் என்பவற்றினூடாக திரிபோ தொழிற்சாலைக்கு கொண்டு வந்து சேர்ந்ததை நாம் காணக்கூடியதாகவிருந்தது. யு.எஸ்.எயிட் ஆனது 1973 ஆண்டு தொடக்கம் திரிபோ தயாரிப்பதற்கு உதவி வருகின்றது.

இலங்கையிலுள்ள சிறார்கள் மற்றும் தாய்மார்களின் ஊட்டத்தை வழுப்படுத்துவதற்கு எமது கூட்டினைவானது பங்காற்றி வருவதை எண்ணும்போது மிகவும் மகிழ்சியளிக்கின்றது.

நாட்டின் பொருளாதார சரிவால் தொழில்களை இழந்து, வருமானம் நலிவடைந்த மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற காரணங்களால் ஊட்டச்சத்து நிறைந்த உணவைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் மக்களிடையே குறைவடைந்துள்ளன.

வறுமையில் வாழும் மக்கள் குறிப்பாக கர்ப்பிணித் தாய்மார்கள், தாய்பாலுட்டும் தாய்மார்கள் மற்றும் சிறு குழந்தைகள் போன்றவர்கள் ஊட்டச் சத்து குறைப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர்.

'நாட்டின் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களில் குறிப்பாக சிறுவர்கள் மற்றும் பெண்களை பற்றியோ நாம் கூடுதலாககவலைப்படுகின்றோம்.' என டபிள்யு.எவ்.பி. இன் இலங்கைக்கான பிரதி வதிவிடப் பணிப்பாளர் ஜெராட் ரெபெல்லோ தெரிவித்தார்.

'இலகுவில் பாதிக்கப்படக் கூடிய இம் மக்களுக்கு ஆதரவளிப்பதில் அமெரிக்கா வழங்கி வரும் உதவிக்கும் மற்றும் அவர்களின் கருனை உள்ளத்திற்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம். இதனால் தமக்கு மிகவும் அவசியமான ஊட்டச்சத்தை இம் மக்கள் பெற்றுக்கொள்கின்றார்கள். அபிவிருத்திச் செயற்பாட்டை வலுவூட்டுவதற்கும் மற்றும் பொருளாதார நெருக்கடியின் நீண்ட கால பாதிப்புக்களை குறைப்பதற்கும். எமது அவசரகால செயற்பாட்டின் ஓர் அங்கமாக திரிபோஷா நிகழ்ச்சி திட்டத்திற்கு டபிள்யு.எவ்.பி. ஆதரவ நல்கிவருகின்றது.'

அத்தியாவசிய ஊட்டச்சத்துடன் தொடர்ச்சியான உணவை உட்கொள்வதற்கான துணை உணவாக திரிபோஷா உள்ளது. தேசிய ஊட்டச்சத்து நிகழ்ச்சியின் ஊடாக இது இலவசமாக வழங்கப்படுகின்றது. அமெரிக்காவால் வழங்கப்பட்டுள்ள திரிபோ தயாரிப்பதற்கான மூலப்பொருள்கள் கர்ப்பிணித் தாய்மார்கள், தாய்ப்பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் ஐந்து வயதுக்குட்பட்ட ஊட்டச்சத்து குறைபாடுடைய சிறுவர்கள் உள்ளடங்கலாக அரை மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு நான்கு சுற்று திரிபோ பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

அமெரிக்காபோன்றநிதியுதவியாளர்களின் நிதியுதவியுடன் டபிள்யு.எவ்.பி. ஆனது, 2022 ஜூன் மாதம் முதல் தமது அவசரகால நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக 3.8 மில்லியன் மக்களுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்தை வழங்கியுள்ளது.

யுஎஸ்எய்ட்டின்நிர்வாகமற்றும் இலகுவில் பாதிப்புக்குள்ளாகும் மக்கள் தொகைக்கான அலுவலகத்தின் இயக்குநர், எஸ்டா சின்போ அவர்கள் சோயா மற்றும் சோளம் கொண்ட தொகுதியை இலங்கை திரிபோா லிமிடட்டின் தலைவர் தீப்திகுலரத்னவிடம்கையளித்தார்.

இதில் டபிள்யு.எவ்.பி. ஒத்துழைப்புக்கான பங்காளித்துவ செயலகத்தின் பணிப்பாளர் டபிள்யு.டபிள்யு.எஸ். மங்கள மற்றும் டபிள்யு.எவ்.பி. இலங்கையின் பிரதி வதிவிடப் பணிப்பாளர் ஜெரார்ட் ரெபெல்லோ ஆகியாரும் பிரசன்னமாகியிருந்தனர்.

(05)






# மனித உரிமை மதிக்கப்படவேண்டும் மன்னாரில் கவனவீர்ப்புப் போராட்டம்

உலக சமாதான நாளான வியாழக்கிழமை மன்னாரில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானங்களை இலங்கை அரசு ஒப்புக்கொண்டு நீண்ட காலங்களாகியும் அவற்றை உரியவாறு நடைமுறைப்படுத்தவில்லை.

எனவே உண்மையைக் கண்டறிதல், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களில் மிகுந்த கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பதுடன், மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் குறித்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன் குறித்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் சிவில் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், மீனவ அமைப்புக்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொதுமக்கள் என பலநூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் அருட் தந்தையர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் யாட்சன் பிகிராடோ மற்றும் பணியாளர்களும் கலந்து கொண்டனர். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சும் தீர்ப்பு

இலங்கை உயர் நீதிமன்றம் அண்மையில் மிக முக்கியமான தீர்ப்பு ஒன்றை வழங்கியிருந்தது. வவுனியாவைச் சேர்ந்த சோலர் பவர் (பிரைவேட்) நிறுவனத்தினால்தாக்கல்செய்யப்பட்டஅடிப்படைஉரிமை மீறல் மனுவை விசாரணை செய்த பின்னர், நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியது. இதன் அடிப்படையில் நிறுவனத்தால்சூரியமின்கலமின்உற்பத்திநிலையத்தை உருவாக்குவதற்குஇலங்கைமின்சாரசபையும்இலங்கை நிலைபெறுதகு அதிகார சபையும் பல ஆண்டுகளாக அனுமதி வழங்க மறுத்ததை எதிர்த்து இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. விசாரணைகளின் அடிப்படையில் அந்த நிறுவனத்திற்கு 10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்தோடு உடனடியாக சூ-ரிய கலமின்உற்பத்தி மையத்தை ஏற்படுத்துவதற்கான அனுமதியை வழங்கும்படியும் நீதிமன்றம் உறத்தரவிட்டுள்ளது.

தேசிய மின்சாரத் தேவையில் 70% புதுப்பிக்கத்தக்க ஆற்றலில்இருந்துஉற்பத்திசெய்யும்இலக்கைஇலங்கை அறிவித்த பல ஆண்டுகளாகிவிட்டன. ஆனாலும் அந்த இலக்கை அடைவதற்கான முயற்சிகள் மந்த கதியிலேயே நகர்கின்றன. குறிப்பாக வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் கடும் வெப்ப வலயப் பகுதிகளில் சூரிய மின் உற்பத்திக் கலங்களைப் பொருத்துவதில் மக்கள் ஆர்வமாக இருந்தபோதும் மின்சார சபையினர் அதற்கு ஒத்துழைப்பதில்லை. தமது மின் தடங்களின் ஊடான பரிவர்த்தனை அளவை மீறிவிட்டது என்று தெரிவித்து இத்கைய சூரிய கல இணைப்புக்களை வழங்குவதற்கு அவர்கள் தடையாக இருக்கின்றனர். தேவையான மாற்றங்களை விருத்திகளைச் செய்து மேலும் மேலும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலமான மின் உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பதிலாக, அதனைக் கட்டுப்படுத்தி முடக்குவதிலேயே அவர்கள் குறியாக இருக்கின்றனர்.

இதுபோக, வடக்கில் ஒன்று மற்றும் 10 மெகா வோல்ட் மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்குவதற்கான திட்ட முன்மொழிவுகளை ஆட்சியாளர்கள் கேட்டிருந்தனர். ஆனால், வழங்கப்பட்ட முன்மொழிவுகளில் இருந்து எந்தவொருதிட்டமும்இன்னமும்அனுமதிக்கப்படவில்லை. பதிலாக இந்தியாவின் அதானி போன்ற பெரு நிறுவனங்களுக்குஅந்த வசதிகள்வழங்கப்படுகின்றன. இத்தகைய பின்னணியில்தான் உயர் நீதிமன்றம் முக்கியத்துவம் மிக்க தீர்ப்பை வழங்கியுள்ளது.

இலங்கை வருடாந்தம் மின்சாரத் தேவைக்காக எரிபொருள்களை மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்குப் பெருந் தொகைப் பணத்தைச் செலவிடுகின்றது. 2022இல் அப்படி இறக்குமதி செய்வதற்கான அமெரிக்க டொலர் கையிருப்பு இல்லாத காரணத்தால் எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டு பெரும் வரிசைகளும் நெருக்கடிகளும் உருவாகின. அத்தகைய நிலைக்கு புதுப்பிக்கத்தக்க மூலங்களான சூரிய சக்தி, காற்று, நீர் ஆகிய ஊடான மின் உற்பத்தி மிகச் சிறந்த மாற்றாக அமையும். இருந்தபோதும் அதனை அபிவிருத்தி செய்வதில் ஏற்கனவே இந்தத் துறையில் இருக்கும் பெருமுதலாளிகள் தடையாக இருக்கின்றார்கள். ஆளும் தரப்பைச் சேர்ந்த பலரும் அதற்கு ஆதரவாக இருக்கின்றார்கள்.

இந்தநிலையில், உயர்நீதிமன்றத்தீர்ப்பு இலங்கையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான வெற்றியாகப் பரவலாகக் கருதப்படுகிறது, எனவே இனியாவது அதிகாரிகளும்ஆட்சியாளர்களும்தமதுஅணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்துவார்கள் என்று நம்புவோம். அது இலகுவான காரியமல்ல என்கிறபோதும் இந்தத் தீர்ப்பு பிரச்சினைக்குள் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சியிருக்கின்றது என்பது வெளிப்படை. இதனை உணர்ந்துகொண்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களானால் நாடு நிலையான அபிவிருத்தியை நோக்கி முன்னேறுவதற்கு உறுதுணையாக இருக்கும்.

# பதுளை வைத்தியசாலையில் 2022இல் 40 வீதமானோர் மாரடைப்பால் சாவு

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தகவல்

கடந்த 2022 ஆம் ஆண்டில் மாத்திரம் பதுளை போதனா வைத் தியசாலையில் 40 சத வீதமானவர்கள் மாரடைப்பால் உயிரிழந்துள்ளனர் என அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பதுளை போதனா வைத்தியசாலையில் இதுவரை ஆஞ்சியோ கிராம் பரிசோதனைகளை முன்னெடுப்பதில் தடங்கல்கள் காணப்படுவதாகவும் இதனால் ஊவா மாகாணத்தில் இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்ற முடியாமல் போகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு பதுளை போதனா வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்ட 1,883 பிரேத பரிசோதனைகளில் 770 மரணங்கள் மாரடைப்பால் ஏற்பட்டவையாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். 2022 ஆம் ஆண்டு மாத்திரம் பதுளை போதனா வைத்திய சாலையின் இருதய சிகிச்சைப் பிரிவு 2,500 இருதய நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் சிலருக்கு மாத்திரமே இதய ஆஞ்சியோ கிராம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் ஆஞ்சியோ கிராம் இயந்திரங்கள் பற்றாக்குறை காணப்படுவதால் சில இருதய நோயாளிகள் கண்டறியப்படாமல் இருக்கின்றனர் எனக் குறிப்பிட்டார் வைத்தியர் பாலித ராஜபக்ஷ.

சில நோயாளர்கள் வைத்தியசாலையில் உயிரிழந்த பின்னரே அவர்கள் இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கண்டறியப்படுகின்றது. சில நேரங்களில் நோயாளிகள் அனுமதிக்கப்படும் போது இறந்துவிடுகிறார்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் அல்லது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருதய நோய் உள்ளமை கண் டறியப் படாமல் இறந்துவிடுகிறார் கள் என்கிறார் வைத்தியர் பாலித ராஜபக்ஷ.

ஊவா மாகாணத்தில் உள்ள 1.5 மில்லியன் பேர் ஆஞ்சியோகிராம் உள்ளிட்ட ஏனைய மருத்துவ பரிசோதனைகளுக்காக கொழும்பு மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலைகளுக்கும் களுத்துறை மற்றும் நாகொட பொது வைத்தியசாலை, கராப்பிட்டி மற்றும் அனுராதபுரம் போதனா வைத்தியசாலை மற்றும் பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது என வைத்தியர் பாலித ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (05)

# குற்றச்செயல்கள் நாட்டில் அதிகரிப்பதற்கு போதைப்பொருள் பாவனையே காரணம்

## சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கருத்து

கொலைகள் மற்றும் பாலியல் குற்றச்செயல்கள் இடம்பெற போதைப்பொருள் பாவனையே பிரதான காரணமாகும். சமூகத்தில் அதிக எண்ணிக்கையிலான கொலைகள் போதைப்பொருள் வர்த்தகர்களாலேயே மேற்கொள்ளப்படுகிறது. எனவே, சமூகத்தில் குற்றச்செயல்களை இல்லாதொழிப்பதற்கு நாட்டு மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என மேல்மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

பாணந்துறை பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது -

பெண் ஒருவர் வீதியில் நடந்து செல்லும் போது மோட்டார் சைக்கிளில் வருகை தரும் சிலர் கழுத்தில் உள்ள தங்க நகையைப் பறித்துச் செல்கிறார்கள். இரவில் திருடர்கள் வந்து வீட்டில் இருப்பவர்களிடத்தில் ஆயுதங்களைக் காண்பித்து பயமுறுத்தி சொத்துக்களை அபகரித்துச் செல்கிறார்கள்.

சமூகத்தில் அதிக எண்ணிக்கையிலான கொலைகள் போதைப்பொருள் வர்த்தகர்களாலேயே மேற்கொள்ளப்படுகிறது. அண்மையில் மாளிகாகந்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தின் போது 6 வயது சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்திருந்தார். சிறுமியின் தந்தை போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையவர் என்பதாலேயே அன்று துப்பாக்கிப்பிரயோகம் மேற் கொள்ளப்பட்டது.

இன்று எம்மிடத்தில் இந்த குற்றச்செயல்கள் மூலம் பயம் ஏற்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூடு மற்றும் கொலைகள் பற்றிய தினசரி செய்திகளே இந்த குற்ற பயத்திற்கு காரணமாகும். குற்றச்சம்பவங்கள் குறித்த அச்சத்தை இல்லாதொழிப்பது பொலிஸாரின் பொறுப்பாகும். போதைப்பொருள் பாவனையே இந்த குற்றச்செயல்களுக்கு முக்கியக் காரணமாகும்.

போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் மன உளைச்சல் மற்றும் அடிமையாதல் போன்றவற்றால் இவர்கள் திருட்டு, கொள்ளை மற்றும் கொலைகளில் ஈடுபட முனைகிறார்கள். எனவே, சமூகத்தில் குற்றச்செயல்களை இல்லாதொழிப்பதற்கு நாட்டு மக்களின் ஒத்துழைப்பு அவசியம். - என்றார். (05)

# உலக வங்கியின் அதிகாரி வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நிலைமை குறித்து தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், இலங்கை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி மேற்கொண்டுள்ள சாதகமான நடவடிக்கைகள் பாராட்டுக்குரியன எனவும் இலங்கை, மாலைத்தீவு மற்றும் நேபாளத்துக்கான உலக வங்கியின் பணிப்பாளர் பாரிஸ் ஹடாட் ஜேர்வோஸ் தெரிவித்துள்ளார்.

வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை வியாழக்கிழமை வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வட மாகாணத்தின் கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு உலக வங்கி பூரண அனுசரணையை வழங்கும் எனவும் இறுதி யுத்தத்தின் பின்னர் மக்கள் மீள் குடியேறி தற்போது நிம்மதியான வாழ்க்கைக்குத் திரும்புகின்றமை மிகவும் மகிழ்ச்சியை தருவதாகவும் பணிப்பாளர் இந்தக் கலந்துரையாடலில் தெரிவித்தார்.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் வட மாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கு தெரியப்படுத்தியதுடன், கல்வி, சுயதொழில், உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதில் வடக்கு மாகாணத்துக்கு ஆதரவளிக்குமாறும் உலக வங்கி பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இதன்படி, எதிர்காலத்தில் வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட மக்களின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்த உலக வங்கி பூரண ஆதரவை வழங்கும் என இலங்கை, மாலைதீவு மற்றும் நேபாளத்துக்கான உலக வங்கியின் பணிப்பாளர் உறுதியளித்தார். (05)

# இந்தியாவால் தேடப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டு ஒப்படைப்பு

இந்தியாவில் இடம்பெற்ற பல பயங்கரவாதச் செயல்கள் மற்றும் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இந்தியாவுக்கு அவசியமாக தேவைப்படும் ஒருவரை இலங்கையில் கைது செய்து இந்தியாவுக்கு நாடு கடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் இடம்பெற்ற பல பயங்கரவாதச் செயல்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பாக இந்திய பாதுகாப்புப் படையினருக்கு தேவைப்படும் இவர், இந்திய பாதுகாப்புப் படையினரையும், இந்திய நீதிமன்றங்களையும் தவிர்த்து வருகிறார்.

குறித்த நபர் பங்களாதேஷிலிருந்து போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி ஒரு வருடத்துக்கு முன்னர் வேறு நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து வர்த்தகர் போன்று நடித்து வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய பாதுகாப்புப் படையினரும் இலங்கைப் பாதுகாப்புப் படையினரும் இணைந்து நடத்திய நீண்ட கால விசேட புலனாய்வு நடவடிக்கையின் பின்னர் இந்த நபர் கைது செய்யப்பட்டு இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை அறிக்கை விவகாரம்

# ஜனாதிபதி செயலகத்துக்கு நாடாளுமன்று என்றைக்குமே அடிபணிந்துவிடக்கூடாது

## லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை அறிக்கை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் தலையிட ஜனாதிபதி செயலகத்துக்கு அதிகாரம் இல்லை.

நாடாளுமன்றம் ஜனாதிபதி செயலகத்துக்கு கட்டுப்பட்டு நடக்க முடியாது என எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றம் காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கையாக சபாநாயகரின் அறிவிப்பு இடம்பெற்றது.

இதன்போது சபாநாயகர் தனது அறிவிப்பில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்ற செயலாளருக்கு கையளிக்கப்பட்டது. அத்துடன் அந்த அறிக்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் பயன்படுத்த நாடாளுமன்ற நூலகத்தில் வைக்குமாறு ஜனாதிபதி செயலகம் அறிவித்திருந்தது.

அதேபோன்று விசாரணை அறிக்கையில் இருக்கும் சாட்சியாளர்களை பாதுகாக்கவும் அதன் இரகசிய சாட்சியங்கள் அடங்கிய தகவல்கள் பொது மக்களுக்கு வெளிப்படுத்த முடியாது.

நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் கண்காணிப்பின் கீழ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் பயன்படுத்த முடியும் என 2023,09,12ஆம் திகதி ஜனாதிபதி, செயலாளர் மூலம் மீண்டும் அறிவித்திருக்கிறார். என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பி குறிப்பிடுகையிலேயே லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை அறிக்கை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் தலையிட ஜனாதிபதி செயலகத்துக்கு அதிகாரம் இல்லை. நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு கையளிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் தீர்மா னிக்க வேண்டியதுசெயலாளர்நாயகமாவார். அவ்வாறு இல்லாமல் அவர் ஜனாதிபதி செயலகத்திடம் கேட்கத் தேவையில்லை.

அத்துடன் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் இரகசிய தகவல் இருப்பதாகத் தெரிவிக்கிறீர்கள். ஆனால் இந்த சாட்சியங்கள் அனைத்தும்திறந்தவிசாரணை குழுவிலே தெரிவிக்கப்பட்டன. அப்படியானால் அந்த சாட்சியங்கள் எவ்வாறு இரகசியமான தகவல்எனத்தெரிவிக்கமுடியும். அதனால் நாடாளுமன்றம் ஜனாதிபதிசெயலகத்துக்கு அடிபணிந்து செயற்படக்கூடாது. நாடாளுமன்றத்தின்கௌரவத்தைப்பாதுகாக்க வேண்டும். - என்றார். (05)

# யானை தாக்கி ஒருவர் சாவு



திருகோணமலை - கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் யானை தாக்கியதில் நபரொருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தச்சம்பவம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் கந்தளாய் - வெள;சிறிகம பகுதியைச் சேர்ந்த தெபிலியனகே விமலரத்ன (வயது 69) எனவும் தெரியவருகிறது.

வீட்டிலிருந்து நடந்து கடைக்கு சென்று கொண்டிருந்தபோது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது. உயிரிழந்தவரின் சடலம் கந்தளாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கந்தளாய் தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அதிகாரி உட்பட 2 பொலிஸார் காட்டு யானை தாக்கி காயம்

## கந்தளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் கான்ஸ்டபிளும் காட்டு யானைகளால் தாக்குதல்!

கந்தளாய் தியபொத பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் கான்ஸ்டபிள் ஆகியோர் காட்டு யானைகளால் தாக்கப்பட்டுள்ளனர்.

காட்டுயானைதாக்கியதில்காயமடைந்த இவர்கள் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உத்தியோகபூர்வ நோக்கத்துக்காக இவர்கள் புதன்கிழமை பாதுகாப்பு வனப் பகுதிக்குச் சென்று கொண்டிருந்தபோது, இந்த யானைகள் தாக்கின எனக் கூறப்படுகிறது. சம்பவம் தொடர்பில் கந்தளாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது kmஇல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



# நாகர்கோவில் பாடசாலை மாணவர்கள் படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகள்

யாழ். நாகர்கோவில் பாடசாலை மாணவர்கள் படுகொலையின் 28 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று (வெள்ளிக்கிழமை) பாடசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், உயிரிழந்தவர்களது உறவினர்கள் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி இலங்கை விமான படையின் புக்காரா விமானம் நாகர்கோவில் மகா வித்தியாலயம் மீது இரண்டு குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 21 மாணவர்கள் உட்பட 39 பேர் மரணமடைந்ததுடன் 35 இற்கும் அதிகமான மாணவர்கள் படுகாயமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)



## மார்த்தனர் நியமனம்



கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் கீழுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளில் பல்வேறு பதவிகளில் கடமையாற்றி வந்தவர்களில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு நடத்தப்பட்ட மார்த்தனர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 17 பேருக்கான பதவியுயர்வு நியமனங்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கிவைத்தார்.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதியாகக் கலந்து கொண்டு குறித்த உத்தியோகத்தர்களுக்கான பதவியுயர்வுநியமனங்களை வழங்கி வைத்தார்.

இந்தப் பதவியுயர்வு நியமனங்களை அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 07 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 07 பேரும், திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 03 பேரும் பெற்றுக்கொண்டனர். இதில் ஆண் மார்த்தனர் 12 பேரும், பெண் மார்த்தனர் 05 பேரும் இப்பதவியுயர்வை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பதவியுயர்வு நியமனம் தொடர்பில், கடந்த காலங்களில் இருந்த 3 ஆளுநர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றும் இவ்விடயம் முன்னெடுக்கப்படாமல் இருந்தமையும் சுட்டிக்காட்டப்படவேண் டிய விடயமாகும்.

இந்நிகழ்வில் கல்முனை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளர்கள், சுதேச மருத்துவத் திணைக்கள வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (05)

# கையகப்படுத்திய மக்களின் காணிகளை ஒப்படைத்து மக்கள் வாழ வழிவிடுங்கள்

## ரிஷாத் எம்.பி. சபையில் வலியுறுத்து

வனதிணைக்களமும் படையினரும் கையகப்படுத்தியுள்ள மக்களின் காணிகளை விடுவித்து, அவர்களின் வாழ்வாதாரங்களுக்கு வழியேற்படுத்த வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வன வளங்களைப் பாதுகாத்தல் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

வர்த்தமானியால் 1984 இற்குப் பின்னர் கையகப்படுத்தப்பட்ட மக்களின் காணி களை விடுவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு, வெளியிடப்பட்ட வர்த்தமானியால் பொதுமக்களின் அதிகளவான காணிகள் வன திணைக்களத்திடமும் படையினரிடமும் சென்றுள்ளன. வதிவிடக்காணிகள், மேய்ச்சல் காணிகள் மற்றும் மேட்டுநில ஜீவனோபாயக் காணிகள் என்பவையே இவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால், 85 வீதமான காணிகள் வன இலாகாவு திணைக்களத்துக்கும் எஞ்சிய 15 வீதக் காணிகள் மக்களுக்கும் கிடைத்துள்ளன.

முசலிப் பிரதேச மக்கள் 1990 இல் புலம்பெயர்ந்து, 2009 இற்குப் பின்னர் சொந்த இடங்களுக்கு வந்தபோது, அவர்களது காணிகளில் 85 வீதமானவை வன திணைக்களத்திடம் சென்றிருந்தன. இதனால், எஞ்சிய காணிகளிலே வாழவும் தொழில்புரியவும் இவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

முள்ளிக்குளம் மற்றும் சிலாவத்துறை கிராமங் கள் கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதனால், இப்பகுதியிலுள்ள முள்ளிக்குளம், மறிச்சுக்கட்டி, முசலி, கொண்டச்சி சிலாவத்துறை மற்றும் அரிப்பு பாலம் போன்ற பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்வோர் கைதாகி அபராதம் விதிக்கப்படுகின்றனர். மோதரகம்மான ஆற்றுப் பகுதியில் மீன்பிடிக்கச்செல்வோர் கைதாகி அபராதம் விதிக்கப்படுகின்றனர். நாளொன்றுக்கு ஐந்நூறு ரூபா உழைக்கும் இம்மக்களிடம், ஐம்பதாயிரம் ரூபா அபராதம் அறவிட்டால் இவர்கள் எங்கே செல்வது?

கொண்டச்சி குளத்தின் புனரமைப்பு பணிக்காக ஒதுக்கப்பட்ட நிதி திருப்பப்பட்டுள்ளது. இந்தக் குளம் வன திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதால் புனரமைக்க முடியாதென அறிவித்துள்ளனர்.

இதேபோன்றுதான், அக்கரைப்பற்று வட்ட மடுக்காணியையும் வன திணைக்களம் பிடித்துவைத்துள்ளது. இதில் 480 ஏக்கரையாவது விடுவிக்க நடவடிக்கை எடுங்கள். இதை மீட்பதற்காக உழைத்த விவசாயிகளில் பலர் இறையடிசேர்ந்தும் விட்டனர்.

மன்னாரில் தேசிய மீலாத் விழா கொண்டாடப்படவுள்ளது. எனினும், இப்பகுதியில் எந்த அபிவிருத்திகளும் இடம் பெறவில்லை. தேசிய மீலாத் விழா இடம்பெறும் பகுதிகள் அபிவிருத்திசெய்யப்படுவதே வழமை. ஆனால், இப்பகுதியில் பள்ளிவாசல்கள் கூட அபி விருத்தி செய்யப்படவில்லை. கோமாளியாக உள்ள பிரதேசசெயலாளரை வைத்துக் கொண்டு சிலர், தமக்கேற்றவாறு மகுடி ஊதுகின்றனர்.

ஆகக்குறைந்தது எங்களால் திறக்கப்பட்ட புத்தளம், மன்னார் பாதையையாவது மீளவும் திறந்து தாருங்கள். மக்களின் போக்குவரத்துச் சிரமங்கள் இதனால் நூறு கிலோமீற்றர் குறையும். - என்று அவர் குறிப்பிட்டார். (05)

## கல்விக்கான உதவி

திருகோணமலையில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கல்விக்கான உதவிதொகை பெரண்டினா நிறுவனம் ஊடாக வழங்கி வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வு திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்து கல்லூரி ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் புதன்கிழமை இடம் பெற்றது.

பெரெண்டினாவின் கல்வி ஆதரவு திட்டங்களில் ஒன்றாக, ஆண்டுதோறும் குறைந்த வருமானம் கொண்ட பெரெண்டினா பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த திறமையான மாணவர்களுக்கு 'பிறைற் ஸ்ருடன்ஸ் கொலசிப் திட்டத்தின் மூலம் உதவி வழங்கி வருகின்றது. இந்த உதவித்தொகை கல்வித் தராதர உயர்தர பிரிவு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அத்தியாவசியமான மாதாந்த செலவுகளை ஈடு செய்ய பெரிதும் பங்களிக்கிறது.

தற்போது, இந்தத் திட்டத்தின் மூலம் வருடந்தோறும் 550 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு 70 லட்சத்துக்கும் மேலான தொகையை வழங்கி ஆதரவளிப்பதில் பெரெண்டினா நிறுவனம் பெருமிதம் கொள்கின்றது.

இந்த நிகழ்வு திருகோணமலை பிரதேச வலய முகாமையாளர் இ.திருச்செல்வம் தலைமையில் முதன்மை விருந்தினராக திருகோணமலை இ.கி.ச ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆரம்ப பிரிவு அதிபர் கணேசலிங்கம் கலந்து சிறப்பித்தார். மேலும் சிறப்பு விருந்தினர்களாக இளைஞர் செயற்பாட்டு ஒருங்கமைப்பாளர் டொனால்ட் மற்றும் தம்பலகாமம் கிளை முகாமையாளர் கிருாந்தன் மற்றும் திருகோணமலை கிளை முகாமையாளர் பு. கஜரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். மற் றும் பெரெண்டினா ஊழியர்கள் அனைவரும் கலந்து சிறப்பித் தனர். அத்துடன் 2022 கல்வி ஆண் டுக்குரிய உயர்தர மாணவர்களுக்கு காசோலைகளும் அப்பியாச புத்தகங்களும் வழங்கி வைக்கப் பட்டன. (05)




## விழிப்புணர்வு ஊர்வலம்

திருகோணமலை எகெட் கரிட்டாஸ் நிறுவனத்தினால் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கில் சுத்தமான மற்றும் பசுமையான திருகோணமலை என்ற கருப்பொருளில் எகெட் கரிட்டாஸ் காரியாலயத்தில் இருந்து ஆரம்பமான விழிப்புனர்வு ஊர்வலம் ஆளுநர் அலுவலகம் வரை இடம்பெற்றது. (05)

ஓம் நம சிவாய



Pathmavathy Arulambalam

பத்மாவதி அருளம்பலம்

(3/1/31 - 21/9/23)

*Passed away peacefully in her sleep at age 92 years on 21st September 2023.*

She will be remembered as the matriarch of the Arulambalam family, a brilliant woman, full of love and strength.

*Wife of late **Arulambalam** and sister of late **Punithavathy**.*

*Dearly loved by*

| Children and spouses | Grandchildren |
|---|---|
| Shivakumar & Gowri | Senthuran & Arjhun |
| Pathmaranjini & Umashankar | Shylu, Anu & Vaishi |
| Padmini & Anandakumar | Arun & Brindha |
| Shanthini & Buvaneswarran | Branavaa & Santosi |
| Gowri Shankar & Premila | Gokulan & Jathukulan |

***As well as great grandchildren, nieces, nephews, cousins and relatives.***

The wake will be held at 54 Borthwick Drive, Singapore 559557.
Last rites will be performed on 23rd September 2023 (Saturday), following which the cortege will leave at 5pm to Mandai Crematorium.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml
Milk Drink
Pepsi M
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

## உயிர்த்த....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

தாக்குதல்கள் சம்பந்தமாக உயர்தொழில்நுட்பத்துடனான சர்வதேச விசாரணையே அவசியமாக உள்ளது - என்றார்.

## ஐ.நா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன்,பொருளாதார நிலைமை உள்ளிட்ட உள்நாட்டு விவகாரங்கள் குறித்து ஜனாதிபதியும், செயலாளர் நாயகமும் கலந்துரையாடினர்.

செயலாளர் நாயகம் இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு ஐ.நாவின் தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதற்கும் சிறந்த சர்வதேசநிதிகட்டமைப்பினை முன்னெடுப்பதற்கும் உதவுவதாக தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

## ஐ.எஸ். .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு தாக்குதல் மற்றும் தேசியபாதுகாப்புதொடர்பான இரண்டாம்நாள்விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும் போதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலின் சூத்திரதாரி யாராக இருந்தாலும் அவர் கண்டறியப்படவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். எங்களால் நீதியைப் பெற்றுக்கொடுக்க முடியா விட்டாலும் இறைவனின் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம் பெறுவதற்கு முன்னர் ஐ.எஸ். பயிற்சி பெற்றவர்கள் நாட்டில் இருக்கின்றனர் என்று அமைச்சர்விஜேதாசராஜபக்ஷ அன்று தெரிவித்தபோது அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தவறியதால் பெரும் அழிவு ஏற்பட்டது. அதே நேரம் தற்போதும் நாட்டில் ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந் தவர்கள் இருக்கின்றனர் என்று இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் தெரிவித் திருக்கிறார்.

சந்திரகாந்தன் இந்த ஆட்சியில் இருப்பவர். அப்ப டியானால் இது தொடர்பில் அவர் வெளிப்படுத்தி, அப்ப டியானவர்களை இனங்காட்ட வேண்டும். அவ்வாறு இல்லாமல், பொய்யைத் தெரிவித்து குழப்பங்களை ஏற்படுத்த இடமளிக்கக்கூடாது - என்றார்.

## சொனிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிறு தாக்குதல் சம்ப வத்தில் அரசியல் சம்பந் தப்படவில்லை. அங்கே மதம் சம்பந்தமான அடிப்படை வாதம்தான் காணப்படுகிறது. 'சொனிக் சொனிக்' என்பது புலனாய்வு அதிகாரி ஒருவ ருக்கு வழங்கப்பட்டுள்ள மாற்று பெயராகும். இந்த விடயம் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றுகின்ற அனைத்து அதிகாரிகளுக்கும் நன்கு தெரியும். அவர் அரபு மொழி நன்கு தெரிந்த ஒரு நபராவார் -என்றார்.

இதன்போது குறுக்கீடு செய்த நாடாளுமன்ற உறுப் பினர் எஸ்.எம்.மரிக்கார், சொனிக் சொனிக் என்பவர் புலனாய்வு அதிகாரி என்றால் அவரை எதற்காக 15ஆம் திகதி விசாரணைக்குழுவின் முன் நிறுத்தினீர்கள் என்ற கேள்வி எழுகின்றது - என்றார்.

தொடந்து உரையாற்றிய சரத்வீரசேகர, அதுபற்றி எனக்குத் தெரியாது அப்போது இருந்தது உங்களது ஆட்சி தான். ஆகவே அப்போதைய புலனாய்வுப் பிரிவின் அதிகாரியையே நீங்கள் அதற்கான காரணத்தைக் கேட்கவேண்டும் - என்றார்.

## மோதியது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர். ஓமந்தையில் வெதுப்பம் நடத்தி வருபவரான சிவசேகரம் தினேசன் இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

வவுனியாவில் இருந்து ஓமந்தைக்குத் தனது மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த தினேசன், பறண்நட்டகல் சந்தியில் உள்ள பேருந்து தரிப்பிடத்தில் நிறுத்தி யிருந்த பேருந்தை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிர்த் திசையில் இருந்து வந்த பட்டா ரக வாகனம் அவரைமோதிப்பந்தாடியதில் படுகாயமடைந்து, அதிககுருதி வெளியேறி உயிரிழந்தார். (100)

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுமைக்கும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுநடைபெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் நடைபெற்ற தேசிய பாது காப்புச்சபை கூட்டத்தில் பங்கேற்பதற்காக அப்போ தைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நானும் பாதுகாப்பு அமைச்சுக்குச் சென்றிருந்தேன். அந்தச் சமயத்தில் ரணில் விக்ரம சிங்கவின் பொறுமை குறித்து ஆச்சரியப்பட்டேன். எங்களை போல் ஒருவ ராக இருந்திருந்தால், பாது காப்புச் சபையின் கதவை திறந்து கொண்டு சென்று உட்பிரவேசித்து உட்கார்ந் திருப்போம்.

பிரதமர் பாதுகாப்பு அமைச்சுக்கு வந்துள்ளதை அறிந்துக்கொண்டபாதுகாப்புச் சபையை சேர்ந்த ஒருவர் வந்து, நீங்கள் தற்போது இந்த இடத்தில் இருங்கள் எனக் கூறினார். அந்தக் கூற்றுக்கு அமைவாக பிரதமரும் நானும் வெளி அறையில் அமர்த்தப்பட்டோம்.

முப்படை தளபதிகள், பொலிஸ்மா அதிபர், பாதுகாப் புச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் அந்த இடத்தில் இருந்தனர். அரசியல்அதிகாரத் தரப்பை சார்ந்த எவரும் அங்கு இருக்கவில்லை. பிரதமர் 25 நிமிடங்கள் வரையில் பொறுமையாக அமர்ந்திருந்துவிட்டு அங்கி ருந்து வெளியேறினார்.

அதனையடுத்து, ரணில் விக்கிரமசிங்க பிரதமர் அலுவலகத்திற்கு வருகை தந்து சகல அதிகாரிகளையும் அழைத்து மாலை ஆறுமணி வரைகலந்துரையாடல்களை நடத்தியதோடு ஏனைய பயங்கரவாதிகளை கைது செய்யவதற்கு நடவடிக் கைகளை எடுத்ததுடன் மீதமுள்ள பயங்கரவாதிகள் குண்டுகளை வெடிக்கச் செய்வதைத் தடுப்பதற்கும் நடவடிக்கைகளை உடன டியாக முன்னெடுத்திருந்தார் - என்றார்.

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடலில் சுமார் 75 மீற்றர் தொலை வில் படகு மிதந்து கொண்டிருந்தது.

மிதந்த படகை மீன வர்கள் உதவியுடன் கரை சேர்த்த கடலோர பாதுகாப்பு போலீசார் படகு குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின் றனர்.

மீட்கப்பட்ட படகு எண் OFRP -A-0454 KCH என தெரியவந்துள்ளது.

இவ்வாறு தமிழகத்தில் மீட்கப்பட்ட படகு கிளிநொச்சி வலைப் பாட்டைச் சேர்ந்த பீற்றர் கனீசியஸ் என்பவரது என அடையாளம் காணப்பட் டுள்ளது. இது எவ்வாறு இந்தியா சென்றது என்பது தொடர்பில் உடனடியாக அறிய முடியவில்லை.

## அபூஹிந்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையை பூரணமாக எங்களுக்குபெற்றுக்கொள்ள முடியும். ஆட்சியாளர்கள் ஏன் மக்களுக்கு இதனை மறைக்க வேண்டும்.

இந்த தாக்குதல் தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைத்து விசாரணை நடத்துவதற்கு நாம் இணங்க முடியாது. அவ்வாறு தெரிவுக்குழு அமைப்பதாக இருந்தால் அதன் எண்ணிக்கை ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களில் சமமாக இருக்க வேண் டும். பெண்டகன் விசார ணை குழுவில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பி னர்கள் சமமாக நியமிக்கப் பட்டதனாலேயே உண்மை யைத் தெரிந்துகொள்ள முடிந்தது.

அத்துடன் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் சஹ்ரானை புலனாய்வு அதிகாரிகள் நாடு முழுவதும் தேடிக்கொண்டிருந்தனர். ஆனால் ஐ.பி. முகவரியில் சஹ்ரானுடன் அதிகமாக தொலைபேசியில் உரையாடி இருப்பது புலனாய்வு அதிகாரி ஒருவர் என அமெரிக்காவின் எப்.பி.ஐ. தெரிவித்துள்ளது. இந்த விடயத்தின் உண்மை என்ன என்பது குறித்து ஆட்சியாளர்கள் விசாரணை மேற்கொள்ளவேண்டும்.

அதேபோன்று மாத் தளை பொடி சஹ்ரான் சொனிக் சொனிக்குடன் தொலைபேசியில் உரையாடி இருப்பது வெளிப்பட்டபோது அந்த சிம்காட் புலனாய்வு ஒருவரிடம் இருப்பது தெரிய வந்துள்ளது. குறித்த புலனாய்வு அதிகாரி, இந்த தாக்குதலை ஐ.எஸ். ஏன் இன்னும் பொறுப்பேற்காமல் இருக்கிறது? விரைவாக பொறுப்பேற்குமாறு சொல் லவும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

பதிலளித்தபொடிசஹ்ரான், இந்துனேசியாவுடன் தொடர்புகொண்டு கேட்டட போது அவர் இன்னும் பைஅத்(உறுதிமொழி)செய்ய வில்லை என தெரிவிக் கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 23ஆம் திகதி இந்தியாவில் இருந்து உறுதிமொழி காணொளி இணையத்தளத்துக்கு பதிவேற்றம் செய்யப் பட்டிருக்கிறது. அதனால் இந்த சொனிக் சொனிக் விட யம் குறித்தும் விசாரணை நடத்தவேண்டும்.

அதேபோன்று குண்டு தாரி ஜெமீல் குண்டை வெடிக்கவைக்க முன்னர் குற்றப்புலனாய்வுஅதிகாரிகள் 2 பேர் ஜெமீலின் வீட்டுக்குச் சென்றுள்ளர். இது எவ்வாறு முடியும்? அதேபோன்று குற்றப்புலனாய்வு அதிகா ரிகள் உரையாடிய தொலை பேசி இலக்கத்தை தேடிப் பார்க்கும்போது அது பிழை யான முகவரியில் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளதுடன் அந்த சிம்காட்டை பயன்ப டுத்திக்கொண்டே லசந்த விக்கிரமதுங்கவை கொலை செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

கீத் நொயர், பிரகீத் எக்னெலிகொட, உபாலி தென்னகோன் ஆகியோரைக்கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்டிருப்பதும் இந்த சிம் அட்டைகளே என்பதும் விசாரணைகளில் வெளிவந்திருக்கிறது. அதனால் குண்டுதாரி ஜெமீலை புலனாய்வு அதிகா ரிகள் எவ்வாறு தெரிந்து கொண்டிருந்தார்கள் என்பதை விசாரிக்க வேண் டும்.

சஹ்ரானுக்கு மேலால் ஒருவர் இருந்தார். அவரின் கட்டளைக்கமையவே அனைத்தும் இடம்பெற் றிருக்கிறது. அவர்தான் அபூஹிந். அது அவரது புனைபெயர். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரி அபூஹிந்தான். அவர் யார் என்பது குறித்து விசாரணைநடத்தவேண்டும். அதேபோன்றுசாராஜெஸ்மின் தொடர்பாக டீ.என்.ஏ. பரிசோ தனை 3 தடவைகள் நடத்தப் பட்டுள்ளது.

முதலாவது இரண்டிலும் சாரா உயிருடன் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக் கிறது 3ஆவதில் அவர் உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சாய்ந்தமருதில் குண்டு வெடித்த வீட்டில் குண்டு வெடித்த பின்னர் சாராவின் குரல் ஓசை கேட்டதாகசஹ்ரானின்மனை வி தெரிவித்திருக்கிறார். அதனால் இது தொடர் பாகவும் விசாரணை மேற்கொள்ளவேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக நியமிக் கப்பட்டு, அமைச்சரவை மற்றும் பிரதமரை நிய மிக்க முன்னர் ஈஸ்டர் தாக்குதல் விசாரணையை மேற்கொண்டுவந்த புல னாய்வு அதிகாரிகள் சானி அபேசேகர உட்பட 31பேரை மாற்றினார். ஏன் அவர் அவ்வாறு செய்தார்? இதன் உண்மையை நாங்கள் அறிந்துகொள்ளவேண்டும்.

பேராயர் கர்த்தினால் இந்தத் தாக்குதலை அறிந்திருந்தார் எனவும் அவருக்கு இது தொடர்பாக புலனாய்வுப் பிரிவினர் அறிவித்திருந்தனர் எனவும் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் இந்தச் சபையில் தெரிவித்திருந்தார். ஆனால் தாக்குதலுக்கு பின்னரே பேராயர் கர்த்தினாலுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது. பேராயர் கர்த்தினாலுக்கு புலனாய்வு பிரிவு வழங்கிய தாக்குதல் தொடர்பான தகவலைஅல்லதுஎச்சரிக்கை விடுத்த கடிதத்தை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

ஈஸ்டர் தாக்குதலுக்கு நான் உட்பட அனைவரும் பொறுப்புக்கூறவேண்டும். அனைத்துஆட்சியாளர்களும் பொறுப்புக்கூறவேண்டும். அதனால் எமது ஆட்சியில் தாக்குதலின் உண்மை சூத்திரதாரிகளை கண்டு பிடிக்க நடவடிக்கை எடுப்போம். இந்த உறுதி மொழியை தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குகிறேன் - என்றார்.

## ஜே.வி.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக சபை ஒத்தி வைப்புவேளை பிரேர ணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்து அதிர்ச்சியை ஏற்படுத்தினார்.

விவாதத்தில் உரையாற்றிய ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸநாயக்க, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்று இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனின் பெயரும் புலனாய்வுப் பிரதானியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள போதும்இவர்கள்அனைவரும் இந்த ஆட்சியில் முக்கிய பதவிகளில் இருக்கின்றனர். அப்படியானல் எவ்வாறு உண்மையான விசாரணை நடக்கமுடியும்?என்றுகேள்வி எழுப்பியிருந்தார்.

அப்போது உடனடியாகக் குறுக்கிட்ட பிள்ளையான் ஜேவிபி தமக்கு ஆயுதங்கள் தந்தது என்று தெரிவித்தார்.

விவாதத்தில் உரை யாற்றிய ஜேவிபி தலைவர் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைமேற்கொண்ட இரு சகோதரர்களின் தந்தையான இப்ரஹிம் 2015ஆம் ஆண்டு எமது கட்சியின்தேசியப்பட்டியலைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். அந்தச் சமயத்தில் அவர் இலங்கையின் புகழ்பூத்த தொழில் முயற்சியாளராகக் கருதப்பட்டார். அதற்காக மஹிந்தராஜபக்ஷஅவருக்கு விருது வழங்கியுள்ளார்.

2014ஆம் ஆண்டு இப்ரஹிமுக்கு எதிராக மாவட்டநீதிமன்றமொன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கின் சட்டத்தரணியாக இருந்தவர் அலி சப்ரி. அவர் தான் தற்போதைய அயலுறவுத்துறைஅமைச்சர். அவர் இப்ரஹிமின் வழக்கு சார்பில் ஆஜராகியதால் அவர் தீவிரவாதத் தாக்குதலுடன் தொடர்புடையவர் என்று பொருள்படாது.

அதேபோன்று, தாக்குதலின் பின்னர் அவர் இரண்டு ஆண்டுகள் குற்றப்புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத் தப்பட்டபோதுஎமதுகட்சியுடன் அவர் தொடர்பு பட்டதாக கூறவில்லை. இப்ரஹிம் இப்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம், ஜனாதிபதி விசாரணை அறிக்கை, மலல்கொடவின் அறிக்கை, நாடாளுமன்றத் தெரிவுக்கு ழுவின் அறிக்கை ஆகியவற் றில் எமது கட்சிக்கும், தாக்குதல் சம்பவத்துக்கும் தொடர்பு இருப்பதாகவோ, இப்ரஹிம்முடன் தொடர்பு இருப்பதாகவோ குறிப்பிடப்ப டவில்லை.

இந்தத்தாக்குதல்நடப்பதை தடுக்காத குற்றத்துக்கா முன்னாள் ஜனாதிபதி மைத்தரிபாலவையோ அல்லது முன்னாள் பிரதம ரானதற்போதையஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவையோ பெயரிடாமல்இருக்கமுடியாது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு அப்போது பிரதமர் பதவியே தேவைப்பட்டது. அவர் குண்டு வெடிப்பதைப் பற்றி கவலைப்படவில்லை. அவருக்குஇப்போதுஜனாதிபதி பதவி தேவைப்படுவதால் அவருக்குவிசாரணைபற்றிக் கவலை இல்லை.

அதேநேரத்தில் சனல்-4 காணொலியில் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. புலனாய்வுப் பிரதானியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் இந்த ஆட்சியில்முக்கியபதவிகளில் இருக்கின்றபோது எவ்வாறு உண்மையான விசாரணை முன்னெடுக்கப்படும்? - என்றார்.

அவரது உரையில் குறுக்கீடு செய்த இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன், மக்கள் விடுதலை முன்ன ணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க எனது பெயரை குறிப்பிட்டு கருத்து தெரிவித்தார். அரசியலுக்காக நீங்கள் எத னையும் பேசலாம். ஆனால் நீங்கள் ஒரு விடயத்தை மறந்திருக்க மாட்டீர்கள் என்று நம்புகின்றேன்.

நாங்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து வந்தபோது உங்களுடையஅமைப்பினால் (ஜே.வி.பி) எமக்குத் துப்பாக் கிகளும் ஆயுதங்களும் வழங்கப்பட்டன.

அப்படியிருக்கும்போது உங்கள் அமைப்பில் இருந்த பிணையில் விடுவிக் கப்பட்டவரின் மகன்மார் களுக்கு உங்களின் பழைய துப்பாக்கிகள், வெடி குண்டுகளை கொடுத்திருக்க முடியாதாதா? -என்றார்.


பதிலளித்த அனுரகுமார திஸாநாயக்க, விடுதலை புலிகளுக்கு நாங்கள் ஆயு தங்கள் வழங்கியதாக கூறுவதை முற்றாக நிராக ரிக்கின்றோம். அது தவ றான கருத்து. எமது அமைப்பு ஆயுத அரசியலில் ஈடுபட்டது. அதுமுழுமையாக நிறைவடைந்தது. இது தொடர்பில்விசாரணைநடத்த முடியும். புலனாய்வுகணக்கில் மாதாந்தம் 35 இலட்சம் ரூபா கணக்கில் வழங்கப்பட்டு பிள்ளையானின் குழு பராமறிக்கப்பட்டது. இப்போதும் 35 இலட்சம் வழங்கப்படுகின்றதா என்று கேட்க விரும்புகின்றேன் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






## இலங்கையில்
# தமிழ் எம்.பி. மீதான தாக்குதல் பற்றி அமெரிக்க செனெட் குழு கரிசனை



இலங்கையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கப்படுவது குறித்து அமெரிக்க செனெடடின் வெளிவிவகார குழு கரிசனை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கு எதிரான வன்முறைகள் குறித்தும் இந்த தாக்குதல்கள் இடம்பெற்றவேளை தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்காக பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறித்தும் கரிசனை கொண்டுள்ளோம் என செனெட் குழு தெரிவித்துள்ளது.

எனினும் இந்த விடயம் தொடர்பில் அதிர்ஷ்டவசமாக பொலிஸார் பலரை கைது செய்துள்ளனர் - இந்த குற்றங்களுக்குக் காரணமானவர்கள் சட்டத்தின் கீழ் பொறுப்புக்கூறச்செய்யப்படவேண்டும் எனவும் செனெட் குழு தெரிவித்துள்ளது. (05)

# மருந்து மற்றும் சிகிச்சை முகாமைத்துவம் தொடர்பான விசேட கூட்டம் கல்முனையில்!



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட சுகாதார சேவை நிறுவனங்களின் மருந்து மற்றும் சிகிச்சை முகாமைத்துவம் தொடர்பான விசேட கூட்டம் வியாழக்கிழமை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய மருந்தாளர் திருமதி தர்ஷினி இந்திரக்குமார் இந்தக் கூட்டத்தை ஒருங்கிணைப்பு செய்திருந்தார்.

பணிப்பாளர் சார்பில் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.அப்துல் வாஜித் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் கணக்காளர் உசைனா பாரிஸ், தொற்று நோய்த்தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ சீ.எம்.பஸால், தொற்றா நோய் தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.எம்.எஸ். இர்ஸாத், பாலியல் தொற்று நோய் தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.என்.எம்.தில்ான் உள்ளிட்ட பிரிவுத்தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மருந்துகள் வீணாகுதலை தவிர்த்து செயற்றிறன் மிக்க மருந்து முகாமைத்துவத்தை உறுதி செய்ய வேண்டும் என்ற பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைவாக மருந்துகள் விநியோகம் மருந்து தட்டுப்பாடு மற் றும் குறைபாடு, மருந்து கொள்வனவு என்பனவற்றுடன் மருந்தாளர், மருந்து கலவையாளர் ஆளணி தொடர்பாகவும் மருத்துவ உபகரணங்கள் மருந்து களஞ்சிய மீள் திருத்த வேலைகள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தின் போது விரிவாகக் கலந்துரையா டப்பட்டது. இந்தக் கூட்டத்தில் வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள், மருந்தாளர்கள், மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர்கள், பொதுச் சுகாதார தாதியர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# ஓய்வுபெற்ற பெண் ராணுவ சிப்பாயை விபச்சாரத்தில் ஈடுபடுத்த முயற்சியாம்

இலங்கை மற்றும் டுபாய் ஆகிய நாடுகளுக்கிடையில் செயற்படும் மனித கடத்தல் வலையமைப்புடன் தொடர்புடைய பெண் ஒருவர் தம் புத்தேகமவில் வைத்து ஆட்கடத்தல் மற்றும் கடத்தல் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த 2022 ஆம் ஆண்டு அனுராதபுரத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பெண் இராணுவ வீராங் கனையை சுற்றுலா விசாவில் டுபாய்க்கு அனுப்பி அங்கு அந்தப் பெண் இராணுவ வீராங்கனையை விபச்சார தொழிலில் ஈடுபடுத்த முயன்றுள்ளார்.

ஓய்வுபெற்ற பெண் இராணுவ வீராங்கனை டுபாயில் இருந்தகாலத்தில் இரண்டு முறை அங்குள்ள விபச்சார விடுதிக்கு செல்லவற்புறுத்தப்பட்டபோது அவர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

அத்துடன் தான் அங்கிருந்து இலங்கை திரும்புவதற்கு வேலை வாய்ப்பு நிறுவனமே பொறுப்பு என்றும் பாதிக்கப்பட்ட ஓய்வுபெற்ற பெண் இராணுவ வீராங்கனை கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில், பயணத்திற்காக செலவழிக்கப்பட்ட ஆரம்பத்தொகையான 5 லட்சம் ரூபாவுக்கு கூடுதலாக 4 லட்சம் ரூபாவை செலுத்தியுள்ளதாக பாதிக்கப்பட்ட பெண் இராணுவ வீராங்கனை பொலிஸ் மா அதிபருக்கு சம்பவம் குறித்து இராணுவ அதிகாரி மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில், சந்தேகநபர் தம்புத்தேகமவில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் டுபாயிலுள்ள அவரது சகாவை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (05)

# 132 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான கஞ்சா சிக்கியது

இலங்கை கடற்படையினரால் நீர்கொழும்பு பகுதியில் வியாழக்கிழமை காலை மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது 132 மில்லியன் ரூபாவுக்கும் அதிகபெறுமதியான 400 கிலோகிராம் நிறையுடைய கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

நாட்டிற்குள் போதைப்பொருள் ஊடுருவலைத் தடுக்கும் நோக்கில் கடற்படையினர் நாட்டை சுற்றியுள்ள கரையோரப் பகுதிகளிலும் தொடர்ச்சியாக ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிலையிலேயே குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கு கடற்படை கட்டளைப்பிரிவு நீர்கொழும்பு மாங்குளி களப்பு பகுதியில் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையில் சந்தேகத்திற்கிடமான படகு ஒன்றை சோதனை செய்த போது 10 பொலித்தீன் உறைகளில் பொதிசெய்யப்பட்ட நிலையில் 400 கிலோ 810 கிராம் கேரள கஞ்சா இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது. இதற்கிடையில் கேரளா கஞ்சாவின் மொத்த பெறுமதி 132 மில்லியன் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா மற்றும் டிங்கி படகு சட்ட நட வடிக்கைகளுக்காக நீர்கொழும்பு கலால் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# உலக சுற்றுலாத் தினத்தையொட்டி மாபெரும் விளையாட்டுப்போட்டிகள்!

## கிழக்கு மாகாண திணைக்கள ஏற்பாட்டில்

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் இணைந்து சுற்றுலாவாரத்துக்கான நிகழ்வுகளை திருகோணமலையில் நடத்த திட்டமிட்டுள்ளதாக கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் என்.எம். நௌபிஸ் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுகள் எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் முதலாம் திகதி வரை திருகோணமலை டச்சுபே கடற்கடையில் இடம்பெறவுள்ளதாகவும், இதில் பங்குபற்றுபவர்கள் கிழக்கு மாகாணத்தை வசிப்பிடமா கக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.




அந்த நிகழ்வுகளில் ஓர் அங்கமாக பட்டம் விடுதல், மரதன் ஓட்டம்போன்றபலபோட்டிநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன எனவும் தெரிவித்த அவர், பட்டம் விடுதல் மற்றும் மரதன் ஓட்டப்போட்டியில் கலந்துகொள்பவர்கள் அழகிய, நேர்த்தியான, சிறந்த எண்ணக்கருக்களை வெளிப்படுத்தும் வகையில் பட்டம் விடுதல் அமைய வேண்டும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் பட்டங்களுக்கு மிகப் பெறுமதியான பரிசில்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், மரதன் ஓட்டப்போட்டியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் போட்டி நடைபெறும் தினத்திற்கு முந்திய தினம் தங்களின் ஈ.சி.ஜி. பரிசோதனை செய்யப்பட்ட அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அரை மரதன் ஓட்டப்போட்டி 21 கிரோ மீற்றர் ஆகும். இதில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கும் ஏனைய 10 வரையான இடங்களைப் பெறுபவர்களுக்கும் பெறுமதியான பணப் பரிசில்கள் வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதுபோன்று ஏனைய போட்டி நிகழ்வுகளில் கலந்துகொண்டு வெற்றிபெறும் முதலாம், இரண்டாம், மூன்றாம் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும்வழங்கப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற்றுக்கொள்ள 0771175163 அல்லது 077 1208335 என்ற தொலைபேசி இலக்கங்களை தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம் என்றும்



கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் என்.எம்.நௌபிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# கலந்துரையாடல்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களின் கீழும் பதிவு செய்யப்பட்ட சமூக சேவை அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இடையிலான விசேட கலந்துரையாடல் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் இளங்குமுதன் தலைமையில் நேற்று(வியாழக்கிழமை) காரைதீவு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சமூக சேவை திணைகளத்தின் உத்தியோகத்தர் மற்றும் 19 பிரதேச செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் 19 பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட சமூக சேவை அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன் பதிவு செய்யப்பட்டு செயற்பாட்டில் இல்லாத அமைப்புகளை அவர்களின் பதிவை மீள் பரிசோதனை செய்து அவ்வாறான அமைப்புக்களை வறிதாக்க நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் கூறப்பட்டது.

அம்பாறை மாவட்ட பதிவு செய்யப்பட்ட சமூக சேவைகள் அமைப்பு மற்றும் அரச சார்பாற்ற நிறுவனங்களை உள்ளடக்கிய சம்மேளனம் உருவாக்கப்பட இருப்பதாகவும் மேலும் இவ்வாறான சம்மேளனம் ஏற்கனவே மட்டக்களப்பு மற்றும் திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுவிட்டது. மேலும் தெரிவு செய்யப்பட இருக்கின்ற அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் பிறகு திருக்கோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்கள் உள்ளடக்கிய சம்மேளன நிர்வாகிகளை வைத்து கிழக்கு மாகாணத்துக்குரிய சம்மேளனம் மிக விரைவில் உருவாக்கப்பட இருப்பதாகவும் பணிப்பாளரால் இந்நிகழ்வில் வைத்து கருத்துரைக்கப்பட்டது.

அதற்கமைய வருகை தந்த அமைப்புகளின் பிரதிநிதிகளை வைத்து அம்பாறை மாவட்டத்திற்குரிய சம்மேளனம் உருவாக்கப்பட்டது. தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர், உபசெயலாளர் தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக உறுப்பினர்களாக 19 பிரதேச செயலகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தி 20 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். (05)

# பயிற்சிக் கருத்தரங்கு

கிழக்கு மாகாண அரச திணைக்களங்களில் அலுவலக சிற்றூழியர்கள் மற்றும் சாரதிகளாக பணியாற்றுபவர்களுக்கு கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவினால் வியாழக்கிழமை பயிற்சிக் கருத்தரங்கொன்று நடத்தப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற குறித்த பயிற்சிக் கருத்தரங்கில் அலுவலக சிற்றூழியர்கள், சாரதிகள் என 70 பேர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஏ.றஹீம் பிரதம வளவாளராக கலந்துகொண்டு அலுவலக பணியாளர்களின் அரச கடப்பாடுகள், பொறுப்புக்கள் மற்றும் ஒழுக்காற்று நடைமுறைகள் தொடர்பாக விரிவுரை நிகழ்த்தினார்.

இந்தப் பயிற்சிக் கருத்தரங்கில் பலநோக்கு அபிவிருத்தி செயலணி திட்டத்தின் கீழ் அண்மையில் நிரந்தர நியமணம் கிடைக்கப்பெற்றவர்களும் கலந்துகொண்டர்.

(05)

# ஆசிரியர் மீது கோரத் தாக்கு

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக்கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றின் ஆசிரியர் மீது புதன்கிழமை தலைக் கவசத்தால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரு மாணவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டைத் தீர்த்து வைக்க முற்பட்ட ஆசிரியர் மீதே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் க.பொ.த உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் அவரது தந்தை உள்ளிட்ட குழுவினர் இரவு நேர கற்பித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆசிரியர் மீது தலைக் கவசத்தால் தாக்கியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் தலைப் பகுதியில் பலத்த காயமடைந்த ஆசிரியர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் உயர்தர வகுப்பு மாணவன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஆசிரியரை தாக்கிய குழுவினர் தலைமறைவாகியுள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்ட ஏனைய நபர்களைகைதுசெய்ய வாழைச்சேனை பொலிஸார் நட வடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# கோஷ்டி மோதல்களை தடுக்க சட்டம் கடுமையாக்கவேண்டும்!

## கலிலூர் ரஹ்மான் கருத்து

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் அமைதியாக இருந்த முஸ்லிம் பிரதேசங்களில் மீண்டும் வன்முறைகள் தலைதூக்கி இருப்பதையே அண்மையில் நாட்டில் பல்வேறு பிரதேசங்களிலும் நடக்கும் விடயங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

முஸ்லிம் சமூகத்தில் தொடர்ந்து மோதல்கள் உருவாகும் வரை நாம் காத்திருக்க முடியாது. எனவே, இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

அதற்கு மத, அரசியல், சிவில் தலைவர்கள் பாரபட்சமின்றி நடுநிலையோடு செயற்பட வேண்டும் என ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினரும், கொழும்புமாநகரசபையின் முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ.கலிலூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவர்வெளியிட்டுள்ளஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கையின் தென்மாகாணத்தில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசலில் இரு குழுக்களுக்கிடையில்இடம்பெற்றதாகக் கூறப்படும் மோதலின் போது பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டு நீதிமன்ற நடவடிக்கையின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர் எனத் தேசிய பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த சம்பவம் இடம்பெற்று ஒரு வாரம் கூட ஆகாத நிலையில், கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் பிரதேசத்தில் இருந்த இறைநேசர் ஒருவரின் ஸியாரம் ஒன்றும் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு உடைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் எடுத்துக்காட்டுவது என்னவென்றால் ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் அமைதியாக இருந்த முஸ்லிம் பிரதேசங்களில் மீண்டும் வன்முறைகள் தலைதூக்கி இருப்பதையே சுட்டிக்காட்டுகின்றன. முஸ்லிம் சமூகத்தில் தொடர்ந்து மோதல்கள் உருவாகும் வரை நாம் காத்திருக்க முடியாது. எனவே, இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கா விட்டால் மனிதாபிமான மற்ற முறையில் அடக்கி ஒடுக்கும் மாற்று சிந்தனைகளும், சட்டவிரோத எண்ணங்களும் வளர வாய்ப்புள்ளது. பின்னர் அதை அதிகாரப் பேராசை கொண்ட புவிசார் அரசியல் சதிகாரர்கள் அதைப் பயன்படுத்தி நாட்டைச் சீரழிக்க எத்தனிப்பர். இவ்வாறான சம்பவங்களில் முஸ்லிம் சமூகத்தின் இளைஞர்களைப் பலிகடா ஆக்காமல் இருப்பது முஸ்லிம் சமூகத்தின் மத, அரசியல் மற்றும் சிவில் தலைவர்களின் பொறுப்பாகும்.

இந்த மோதல்களின் அடிப்படைக் காரணம் என்ன என்பதையும் நாம் உடனடியாகக் கண்டறிய வேண்டும்.

ஏனென்றால், கண்ணுக்குத் தெரியாத ஓர் அதிகாரபலம் அவர்களின் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காக நம்மைப் பிரிக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இவ்வாறான செயற்பாடுகள் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் இந்த மோதல்களை நிறுத்துவதற்கு அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு விசாரணை செய்து சட்டத்தை பலப்படுத்த வேண்டும் என்பதே அமைதியான இஸ்லாத்தை பின்பற்றும் இலங்கை முஸ்லிங்களின் உண்மையான விருப்பமாகும் என்று தெரிவித்துள்ளார்.

(05)

# மருதமுனை எவரெடிக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணம் வழங்கல்!





மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் 'மருதமுனை இளைஞர்விளையாட்டுகழகங்களுக்கு உதவுவோம்' எனும் நோக்குடன் மருதமுனையிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்ற நிகழ்வு மனாரியன் 88 அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல். முக்த்தாரால் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பாக மருதமுனை எவரெடிவிளையாட்டுக்கழகத்துடனான கலந்துரையாடல் பர்வின் ரெடிங் மற்றும் லதான் அக்ரோ இன்டர்நேனல் ஆகிய நிறுவனங்களின் நிறைவேற்று பணிப்பாளர் கலீல் முஸ்தபாவுடன் மருதமுனை பிரதான வீதி முஸ்தபா காம்ப்லெஸ் நிறுவனக்காரியாலயத்தில் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது மருதமுனை எவரெடி விளையாட்டுக்கழக கட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

மேலும், இந்நிகழ்வில் எவரெடி விளையாட்டுக்கழக வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன் விளை யாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை எவரெடி விளையாட்டுக் கழகத்துக்கு வழங்கி உதவிய தொழிலதிபர் கலீல் முஸ்தபா மற்றும் மனாரியன் 88 பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல்.முக்தார் ஆகியோருக்கு நன்றிகளையும், பாராட்டுக்களையும் எவரடி விளையாட்டு கழக செயலாளர் தெரிவித்தார். (05)


தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
உலக சுற்றுலா தினம்
2023
செப்டெம்பர்
27, 28, 29
மாலை
4.00 மணி
தொடக்கம்
இரவு
9.00 மணி
வரை
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
COMMERCIAL BANK
The Thinnai
Jetwing
JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
The Valampuri
A1
Chrysalis
Catalyzing change
ஊடக அனுசரணையாளர்:-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# 11 சிவில் சமூக அமைப்புகள் கண்டனம்

தியாகிதிலீபனின்உருவப்படம் தாங்கிய ஊர்தியின் பொத்துவில் முதல் யாழ்ப்பாணம் வரையான பவனியின்போது திருகோணமலையில் அதன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு வடக்கு கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் நேற்று அந்த அமைப்புக்கள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு கிழக்கில் இந்திய அமைதி காப்புப் படை (IPKF) இருந்தபோதுசாகும்வரைபட்டினிப் போராட்டம் நடத்திய திலீபனின் தியாகத்தைநினைவுகூர்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அமைதியானவாகனப்பவனிமீதும்தமிழ் நாடாளுமன்றஉறுப்பினர்உட்பட்ட தமிழ் செயற்பாட்டாளர்கள் மீதும் திருகோணமலையில் சிங்களக் கும்பலால்நடத்தப்பட்டதாக்குதலால் வடக்கு கிழக்கில் உள்ள சிவில் சமூக அமைப்புகளாகிய நாங்கள் அதிர்ச்சி அடைந்துள்ளோம்.

தமிழர்களின் நினைவேந்தல் உரிமையைத் தொடர்ந்து மறுப்பதும், அதன் ஒரு பகுதியாகிய தற்போதைய தாக்குதலும், தமிழரின் நினைவுகளையும் வரலாற்றையும் திட்டமிட்டு அகற்றும் நோக்கிலான நினைவழிப்பு (Memoricide) எனவே கருதப் படமுடியும் - தமிழ் மக்களின் கூட்டு நினைவுகளை பௌதிக ரீதியாகவும்உளவியல்ரீதியாகவும், முறையாகத் திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கையாகும் இது - என்பதுடன், இனப்படுகொலை நோக்கமிருப்பதை நிரூபிக்கும் ஒரு தெளிவான ஆதாரமாகவும் உள்ளது.

ஓகஸ்ட் 2023இல், நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, தமிழ் நீதிபதி ஒருவரை 'மனநலம்பாதிக்கப்பட்டவர்' என்று முத்திரை குத்தி,- இலங்கை ஒரு சிங்கள-பௌத்த தேசம் என்பதை நீதிபதி புரிந்து கொள்ள வேண்டும் அத்துடன் சில தமிழ் நீதிபதிகள் வடக்கு கிழக்கில் உள்ள பௌத்ததொல்பொருள்பாரம்பரியத்தின் நலனுக்கு எதிராக செயற்படுகின்றனர்- என்று கூறினார். தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு கிழக்கில் உள்ள பௌத்த ஸ்தலங்களை குறிவைக்கின்றனர் என்று முறையிட்ட கல்கமுவ சாந்தபோதி தேரர், குருந்தூர்மலையேதமிழர்களின்இறுதிவழிபாடாகஇருக்கும் என எச்சரித்துள்ளார். பௌத்த விகாரைகள் மீதும் பிக்குகள் மீதும் கை வைக்கும் தமிழர்கள் தலை துண்டிக்கப்படுவார்கள் எனக்கூறி, வன்முறைக்கு வெளிப்படையாக அழைப்பு விடுத்தார் மேர்வின் சில்வா. இவை போன்ற வெறுப்புப் பேச்சுக்கள் கட்டுப்படுத்தப்படாமல் போகின்றன, அதன் வளர்ச்சி திருகோணமலையில் சிங்களக் கும்பல்வன்முறையில்ஈடுபடுவதில் வந்து நிற்கின்றது.

தென்னிலங்கை கரிசனையின்றி கண்மூடியிருக்கின்ற வடக்கு - கிழக்கில் இயல்பானதாக ஆகிவிட்ட கடுமையான இராணுவமயமாக்கலின் பின்னணியில், இந்த வன்முறைத் தாக்குதல்கள், தீவில் சட்டத்தின் ஆட்சி இல்லாததை மட்டுமல்ல, சட்டத்தை அமுல்படுத்துவதற்கான அமைப்புகள் தமிழர்களை ஒடுக்கும் நடவடிக்கைகளில் கைகோர்த்துள்ளதையும் உறுதிப்படுத்துகின்றன.

அமைதியான வாகனப்பவனி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப் போவதாகவும், அவர்கள் துன்புறுத்தப்படுவதாகவும், கண்காணிக்கப்படுவதாகவும் ஏற்பாட்டாளர்களால் முன்கூட்டியே எச்சரிக்கப்பட்ட காவல்துறை, தாக்குதலைத் தடுக்க எதுவும் செய்யவில்லை, தாக்குதல்கள் நடத்தப்படும்போது பார்த்துக் கொண்டிருந்தது. இந்த ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதல்இராணுவம்மற்றும்சட்ட அமுலாக்கத்துறைகளின்உடந்தை இல்லாமல் நடந்திராது, சிங்கள கும்பல் தாக்கத் துணிந்திராது என்பதை அம்பலப்படுத்துகிறது.

இன்றைய ஆட்சி தேசிய ஒருமைப்பாடுமற்றும்நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்க முயலும் ஒரு கட்டத்தில் நிகழ்ந்துள்ள இந்தத் தாக்குதல், எந்தவொருஉண்மைக்கும்நல்லிணக்கத்துக்குமான ஆணைக் குழுவின் வெற்றிக்கு இன்றியமையாத தமிழர்கள் திட்டமிட்டு ஒடுக்கப்பட்டுள்ளனர் என்பதை ஏற்றுக் கொள்ளும் மன நிலை பெரும்பான்மை சமூகத்தினரிடையே இல்லை என்பதை மீள உறுதி செய்கின்றது.

நினைவேந்தல்கள் மட்டும் பாதிக்கப்பட்டவர்களுக்குநீதிவழங்குவதில்லை என்றாலும், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் நல்லிணக்கத்துக்கும் இன்றியமையாததாகவே அது இருக்கின்றது. இரண்டு விடயங்களான உண்மைக்கான உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரத்துடன் உள்ளார்ந்த முறையில் அது பின்னிப்பிணைந்துள்ளது.

நினைவேந்தல்கள் தடை செய்யப்படுவது முன்னெடுக்கப்படும் அமைதியைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்க முயற்சிகளில் எதிர்மறையான தாக்கத்தையே ஏற்படுத்தும். இது போன்ற சம்பவங்கள், உள்ளக பொறுப்புக்கூறல்பொறிமுறைகளை நாம் ஏன் நம்பவில்லை என்ற எமது நிலைப்பாட்டுக்கு மேலும் சான்றாகின்றது.

அகிம்சை வழியிலான செயற்பாடுகளை பயங்கரவாதமாக சித்தரிப்பது என்பது, பொறுப்புக்கூறல் மற்றும் உண்மையான பிரச்சினையை தீர்ப்பதற்கான அவர்களது விருப்பமின்மையை நியாயப்படுத்த அடுத்தடுத்து வரும் அரசாங்கங்கள் கையாள்கின்ற ஒரு உத்தியாகும். அகிம்சை வழிப் போராட்டங்கள் தமிழ்க் கலாச்சாரத்திற்கு தனித்துவமானது ஏனெனில் தமிழ் மக்கள் தமது போராட்டத்தை அகிம்சை வழியிலேயே ஆரம்பித்தார்கள் என்பதை நினைவில் கொள்ளும் அதே வேளை இலங்கை அரசு தமிழர்களின் அகிம்சை வழி எதிர்ப்புகளைக்கூட எப்போதும் அழிக்கும் என்ற உண்மையை இந்த சம்பவம் வருத்தந்தக்க வகையில் வெளிப்படுத்துகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும்எனவும், தீவில் உள்ளநீதிஅமைப்புதமிழர்களுக்கு நீதி வழங்கும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லாவிட்டாலும் எதிர் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள்நடைபெறாமல்தடுக்கும்வகையில்குற்றவாளிகள்நீதிவிசாரணைகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டும்எனவும் வலியுறுத்துகிறோம்- என்றுள்ளது. 11சிவில்அமைப்புக்கள் இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன.

# வாழ்வாதார உதவிகள்



(காரைதீவு நிருபர்)

'உங்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பும்... லைஃப் லைன்' நிகழ்வுநாவிதன்வெளிபிரதேச செயலகமண்டபத்தில்வியாழக்கிழமை இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செய லக உதவி பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன் நிகழ்வில் தலைமை அதிதியாகக் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்ததுடன், வாடிக்கையாளர்களுக்கான வாழ்வாதார உதவிக் கொடுப்பனவுகளையும் வழங்கி வைத்தார்.





முதற்கட்டமாக50பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. 1550 பயனாளிகளுக்காக மொத்தமாக சுமார் 5.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான உதவிகள் வழங்கப்படவுள்ளன. நாவிதன்வெளி மற்றும்கல்முனை பிரதேசசெயலாளர் பிரிவில் உள்ள பயனாளிகளுக்கு இந்த உதவிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டத்தில் 6 கிளைகளுடன் 13000 த்திற்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களைக்கொண்டபெரெண்டினா நிறுவனம் வாழைச்சேனை , செங்கலடி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி,கல்முனை மற்றும் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள வாடிக் கையாளர்களிற்கு 45 மில்லியன் ரூபாய் பெறுமதியான நிதி உதவிகளை ஏற்கனவே வழங்கியுள்ளது. தற்போது நாவிதன்வெளி மற்றும் கல்முனைப் பகுதிகளில் இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன.

பெரெண்டினா தன்னார்வ மற்றும் நிதி நிறுவனத்தின் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு செயற்திட்டங்கள் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்டத்தில் போசாக்குக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு பல்வேறு செயற்றிட்டங்களும் பெரண்டினா நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வீட்டுத் தோட்ட ஊக்குவிப்பிலும் இந்த நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

# அக்கரைப்பற்று மாநகர சபைக்கு தங்க விருது






(நூருல் ஹுதா உமர்)

சிறந்தகணக்கியல்அறிக்கைகளைத் தயாரிக்கின்ற உள்ளூராட்சி மன்றங்களைத்தெரிவுசெய்வதற்கான போட்டியில் அக்கறைப்பற்று மாநகர சபை தங்க விருதை வென்றுள்ளது.

அஸோசியேசன் ஒவ் பப்ளிக் பைனாஸ்அக்கொண்டஸ்ஒவ்சிறீலங்கா நிறுவனத்தினால் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில்வெற்றபெற்றவர்களுக்கான விருது வழங்கும் விழா நேற்று அனுராதபுரத்தில் இடம்பெற்றது.

2022ஆம்ஆண்டில்தயாரிக்கப்பட்ட சிறந்தகணக்கறிக்கைகளுக்காகஇந்தப் போட்டி நடத்தப்பட்டது.

அனுராதபுர நகரில் அமைந்துள்ள வடமத்திய மாகாண சபை கட்டடத் தொகுதியின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட விருது வழங்கும் வைபவத்தில் அக்கரைப்பற்று மாநகர சபை சார்பில் வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவின் பிரதம முகாமைத்துவசேவைஉத்தியோகத்தர் எம். பீ. சலீத் மற்றும் கணக்கு பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். முஜாஹித் ஆகியோர் கலந்து கொண்டு விருதைப் பெற்றுக் கொண்டனர்.

மாநகர ஆணையாளர் எ.டீ. எம். றாபி அவர்களின் வழிகாட்டலில் மாநகர சபைப் பணிப்பாளர் எ. எம்.ஹபீபுர் ரஹ்மான், கணக்குப் பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.ஏ.எம். ரியாத், வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம். பீ. சலீத் ஆகியோரின் தலைமையில் கடந்த 2023ஜூலைமாதத்தில்அக்கரைப்பற்று மாநகர சபையின் அலுவலர்களால் இப்போட்டிநிகழ்ச்சிக்கானஅறிக்கைகள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

இவ்விருதானது அக்கரைப்பற்று மாநகர சபை அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் அர்ப்பணிப்பான சேவைக்கு கிடைத்த வெற்றி என்று பணிப்பாளர் தெரிவித்தார்.

# சிறப்புற இடம்பெற்ற சிறுவர் மகிழ்வூட்டல்



கிளிநொச்சி மாவட்டம், பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட வினாசியோடை மகாவித்தியாலயத்தில்சிறுவர்மகிழ்வூட்டும் நிகழ்வு வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு சிறப்புற நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் சிறுவர், பெண்கள் பிரிவினரின் ஏற்பாட்டில் வினாசியோடை மகாவித்தியாலயபதில் அதிபர் இ.வினோதராஜ் தலைமையில் இந்த மகிழ்வூட்டல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

சிறுவர் மகிழ்வக நிறுவனத்தின்(Center for Child Development) அனுசரணை மற்றும் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந் நிகழ்வில், சிறுவர்களுக்கு மகிழ்வூட்டும் விளையாட்டுக்கள் பல இடம்பெற்றன.

சிறுவர்களிடம் ஓர் மகிழ்ச்சியான மனநிலை உருவாகியிருக்கும் நோக்கில் குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய வினாசியோடை மகாவித்தியாலயபதில் அதிபர்இ.வினோதராஜ் தெரிவித்ததாவது:

சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதும், அவர்களின் உளநல ஆரோக்கியத்தில் பங்குபெறுவதும் சமூகத்தின் எல்லோருக்குமானமுக்கியபொறுப்பாகும். இன்றைய காலப்பகுதியில் பல்வேறுபட்ட நெருக்கடிகளின் மத்தியிலும் சிறுவர்களை உள ஆற்றுகைப்படுத்த இவ்விதமான நிகழ்வுகள் துணை செய்கின்றன.

அதனடிப்படையில், மிகவும் பின்தங்கியுள்ள எமது பாடசாலையினைஇச்செயற்றிட்டத்திற்குத் தெரிவுசெய்துள்ள கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு பாடசாலை சமுகம் சார்பில் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் கலைத் துறையில் எமது பாடசாலை மாணவி ஒருவர் 3A பெறுபேற்றினைப்பெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாமிடத்தையும், மற்றொரு மாணவி A, 2B பெறுபேற்றினைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 57ஆம் நிலையினையும் பெற்றனர்.







இதனைவிட2018ஆம்ஆண்டு எமது பாடசாலையில் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் கலைத்துறை தொடங்கப்பட்டது. 2020ஆம் ஆண்டு மூன்று மாணவர்களும், 2021ஆம் ஆண்டு ஒருவரும், 202ஆம் ஆண்டு இரண்டு மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்குத் தகுதி பெற்றுள் ளனர் - என்றார்.

(113)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.09.2023இல் வெளியிடப்பெற்றது.